பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 11 திங்கட்கிழமை (24-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:181

# உறுதிமொழிகளை புலிகளுக்கு எழுத்தில் தர அரசு பின்னடிப்பு!

## பாலாவுடன் விவரமாக உரையாடிய பின் சொல்ஹெய்ம் நேற்று இலங்கை புறப்பாடு

கொழும்பு,மே24

**அமைதிப் பேச்சுக்கள் தொடங்குவதற்கு அடிப்படையான நான்கு விடயங்கள் தொடர்பாக அரசின் உறுதிமொழி எழுத்தில் தரப்படவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளின் தலைமை விடாப்பிடியாக உள்ள நிலையில், அத்தகைய உறுதியுரையை எழுத்தில் வழங்குவதற்கு அரசுத் தலைமை பின்னடித்து வருவதாக அறியவருகின்றது.**

**இவ்விடயம் குறித்து இருதரப்புடனும் கலந்துரையாடி இணக்கமான நிலைப்பாடு ஒன்றை எடுக்கும் முயற்சியாக நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இன்று இலங்கை வருகின்றார்.**

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்றும், நேற்றுமுன்தினமும் தொலைபேசி மூலம் விரிவாக உரையாடிய பின்னர் அவர் நேற்று இலங்கைக்குப் புறப்பட்டார்.**

கடந்த 14 ஆம் திகதி நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இலங்கையை விட்டுப் புறப்பட்டுச்சென்ற பின்னர், அமைதிப் பேச்சுக்கான முயற்சியில் இணக்கம் ஏற்படுத்தும் விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாகத் தடைப்பட்டிருப்பதாக நோர்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

"இடைக்கால நிர்வாகம் பற்றி மட்டுமே முதலில் பேச்சு; அதில் முடிவு கண்டு அதை நடைமுறைப்படுத்திய பின்னரே இறுதித்தீர்வு குறித்துப் பேசப்படும்" என்ற விவகாரம் புலிகள், அரசு ஆகிய இருதரப்பினரினதும் இணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் நோர்வே வெளியிடும் பொது

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராகின்றது அரசு!

கொழும்பு,மே24

விடுதலைப் புலிகள் தமக்கென விமானப்படை ஒன்றை விருத்திசெய்து வருகின்றார்கள் எனப் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகி வருவதை அடுத்து, அது குறித்துக் கவலையடைந்துள்ள பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் நிலைமையைச் சமாளிப்பதற்கும் எதிர்கொள்வதற்கும் புலிகளின் விமானப்படையினால் வரக்கூடிய அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

உயரதிகாரிகள் மட்டத்தில் பதில் நடவடிக்கைத் திட்டம் (Plan for Counter Measures) ஒன்று அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் -

நாளை கொழும்பில் நடைபெறும உயர் பாதுகாப்பு மாநாடு ஒன்றில் இது குறித்து விவாதிக்கப்படவிருப்பதாகவும் -

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்யப்படவேண்டிய கருவிகள்,ஆயுதங்கள், தளபாடங்கள் ஆகியவை குறித்தும்

(16ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

## 95 ஆயிரம் வீடுகள் நிறுவும்பணி: திருமலையில் உயர் மட்ட மாநாடு

வடக்கு - கிழக்கில் 95 ஆயிரம் வீடுகளை அமைக்கும் உலக வங்கியின் திட்டத்தை இறுதியாக்கும் உயர் மட்ட மாநாடு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இத்திட்டத்தை எந்த முறையில் நடைமுறைப்படுத்துவது, துரிதமாக முன்னெடுக்க மேற்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் ஆகியன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து இறுதிமுடிவு எடுக்கப்படும்.

உலக வங்கியின் வாஷிங்ரன் தலைமையக அதிகாரிகள் இந்த மாநாட்டில் விசேடமாகக் கலந்து கொள்கின்றனர்.

ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் இந்த மாநாட்டில் பங்குபற்றுவர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரச அதிபர்கள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் 95 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்துக்கு உல்க வங்கி 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-3)

## இடைக்கால நிர்வாகம் குறித்து முதலில் பேசுவதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

கொழும்பு,மே24

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகவே முதலில் ஆராயப்படவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டுககு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் எதிர்ப்பு அதிகரிதது வருவதாக நம்பப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும ஆரம்பிப்பதற்குப் புலிகள் தெரிவித்த நான்கு அடிப்படை நிலைப்பாடுகளில் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பும் ஒன்று. பேச்சுக்களை ஆரம்பிக்கும்போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்தே முதலில் ஆராயப்படவேண்டும் என்பது புலிகளின் கோரிக்கை.

ஆனால், இதற்கு ஆளும் கூட்டமைப்புக்குள் எதிர்ப்பு அதிகரித்து வரு

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின்

## மீள்குடியமர்வு குறித்து ஆராய்வதற்கு ஹரீம் பீரிஸ் புதனன்று யாழ். வருகிறார்

யாழ்பாணம்,மே24

யாழ்மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சுப் பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் நாளைமறுதினம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

நாளை இவர் யாழ்ப்பாணத்துக்கு வரவிருந்தார். திருமலையில் உலக வங்கியின் ஏற்பாட்டில் இடம்பெறும் கூட்டத்தில் அவர் பங்குபற்றுவதால் நாளைமறுதினம் வரை அவரது விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

விமானம் மூலம் பலாலி வரும் அவர் அங்கு படை அதிகாரிகளுடன் மீள்குடியமர்வுப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வார். அதி பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீள் குடியமர்த்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் அவர் கலந்துரையாடுவார்.

அதன்பின் யாழ். நகருக்கு வரும் அவர் அரச அதிபர் மற்றும் அரச

(16ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் சூரியனின் நினைவுக்கல் கோப்பாயில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம்,மே24

2002ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நடந்த கடல் நடவடிக்கை ஒன்றின்போது வீரச்சாவடைந்த மேஜர் சூரியன் அல்லது சூரி (நாவேந்திரன் கமலேந்திரன் - கொழும்புத்துறை) என்ற மாவீரரின் நினைவுக்கல் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை 5.30 மணிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் ப.சிதம்பரம் மீண்டும் நிதியமைச்சர்!

வெளிவிவகாரம் - நட்வர் சிங்குக்கு

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய அரசின் நிதி அமைச்சராகத் தமிழகத்தைச் சேர்ந்த ப.சிதம்பரம் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

கலைஞர் கருணாநிதியின் பேரனான தயாநிதி மாறன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சராகின்றார்.

தி.மு.க. சார்பில் அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற மற்றைய இருவரில் ஒருவரான ரி.ஆர்.பாலு தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் பதவியைப் பெறுகின்றார்.

ஒவ்வோர் அமைச்சருக்கும் ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களின் விவரம் நேற்றுப் பின்னிரவில் வெளியாகியது.

நேற்றிரவு 11 மணிவரை வெளியான தகவல்களின்படி அமைச்சர்களின் விவரம் வருமாறு :-

★ ப.சிதம்பரம் - நிதி.
★ சிவராஜ் பட்டீல் - உள்துறை
★ பிரணாப் முகர்ஜி - பாதுகாபபு
★ குலாம் நபி ஆஸாத் - நாடாளுமன்ற விவகாரம், நகர்ப்புற வளர்ச்சி.
★ பி.எம்.சயீட் - மின்வலு.
★ நட்வர் சிங் - வெளியுறவு.
★ கமல்நாத் - வர்த்தகமும் கைத்தொழிலும்.
★ சரத்பவார் - உணவு, விவசாயம்.
★ பரத்வாஜ் - சட்டம்.
★ அர்ஜுன் சிங் - மனிதவள மேம்பாடு.
★ ராம் விலாஸ் பஸ்வான் - [illegible] இரசாயனப் பொருள், உரம்.
★ அன்புமணி ராமதாஸ் (பா.ம.க.) - சுகாதாரம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மாதத்திற்கு 1.25% தான்

தங்க



தேசிய சேமிப்பு வங்கியின் ரன்சஹான அடகுச் சேவைக்கு
மாதாந்த வட்டி 1.25%

- ஒரு தங்க பவுனுக்கு ரூ.9000
- இலகு அடிப்படையில் மீட்டெடுப்பதற்கான வசதி
- துரித சேவை
- இரகசியமாக இருக்கும்
- தங்க ஆபரணங்களுக்கு அரச வங்கியின் உத்தரவாதம்
- தங்க ஆபரணங்கள் சுரண்டிப் பார்க்கப்படமாட்டாது
- நாடெங்கிலும் 100 கிளைகள்

NSB

தேசிய சேமிப்பு வங்கி

PHOENIX O&M 0810

# காசநோயாளர் பெண்கள் விடுதி ஜூன்முதல் ஊர்காவற்றுறைக்கு!

கோப்பாய்,மே24

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் தற்போது இயங்கி வரும் காசநோயாளர்களின் பெண்கள் சிகிச்சை விடுதி அடுத்த மாதம் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்படவுள்ளது.

மேற்படி சிகிச்சைப் பிரிவை வேறிடத்திற்கு இடம்மாற்றுமாறுகோரி இப்பகுதி மக்கள் கடந்த மூன்று வருடங்களாகத் தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தனர். இதனையடுத்து கடந்த வருட இறுதிப் பகுதியில் ஆண் நோயாளர்களுக்கான விடுதி வல்வெட்டித்துறை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

இது விடயமாக மருத்துவமனை வைத்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

காசநோயாளி ஒருவர் இனங்காணப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவரிடமிருந்து நோய் தொற்றும் எந்த அபாயமும் ஏற்படுவதில்லை.

ஆனால், சிகிச்சைக்குட்படாமலும் சிகிச்சையை இடைநடுவில் கைவிடுபவர்களுமே மிகவும் ஆபத்தான நோய்காவிகளாவர். ஒழுங்காக மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே நோயாளர்கள் விடுதிகளில் தங்க வைக்கப்படுகின்றனர். எனவே, பொது மக்கள் வீணான அச்சத்தைத் தவிர்த்து இது சம்பந்தமான குழப்பங்களைத் தவிர்க்கவேண்டும் என்றார். (எ-72)

## இரத்தினபுரியில் ஒருவர் சுட்டுக்கொலை!

இரத்தினபுரி,மே24

இரத்தினபுரி, முவாகலப் பகுதியில் இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவம் நேற்றுக் காலை 5.30 மணியளவில் இடம்பெற்றது. சுதத்வக்குபுர (வயது 43) என்பவரே கொல்லப்பட்டவராவார். நித்திரையில் வைத்து இவர் சுடப்பட்டார்.

இரத்தினபுரி பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிர்ப்பு வலுக்கிறது**

# நாடாளுமன்றில் விவாதிக்க ஹெல உறுமய கோரிக்கை!

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக முதலில் பேசப்படுவதறகு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் கொலைசெய்யப்படுதல், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அடிப்படையாக வைத்து பேச்சுக்களை ஆரம்பித்தல் ஆகியவை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய கடிதத்தை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரத்ன அனுப்பி வைத்திருக்கிறார்.

தமிழ் புலனாய்வுத்துறையினரே இதுவரை கொல்லப்பட்டு வந்தனர். ஆனால், தற்பொழுது இது சிங்களப் புலனாய்வுத்துறையினர் மீது திரும்பி உள்ளது. இதனை இனியும் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது என்றும் திலக் கருணாரத்ன தெரிவித்தார். (எ-க)

# ரெலோவின் தேசிய மாநாடு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,மே24

ரெலோ இயக்கத்தின் 7ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியாவிலுள்ள ரெலோ இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் 6ஆவது தேசிய மாநாட்டின் இறுதிப் பொதுக் குழுக் கூட்டத்திலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரெலோ இயக்கத்தின் உபதலைவர் கே.ஹென்றி மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் என்.இந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், எஸ்.வினோநோதராதலிங்கம், தலைமைக் குழு உறுப்பினர் எஸ்.ரூபராசா, பிரசாரச் செயலாளர் என்.விந்தன் கனகரத்தினம் மற்றும் நிர்வாகச் செயலாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோருடன் மாவட்டச் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக மாவட்ட ரீதியாக பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்களை நடத்துவது எனவும் -

அத்துடன், மாவட்டச் செயலாளர்களையும் தெரிவுசெய்வதெனவும் கூட்டதத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக மேற்படி அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ-9)

# மலையக மக்கள் முன்னணி விரைவில் புதுவடிவம் எடுக்கும்

கொழும்பு,மே24

வடக்கு - கிழக்கு தமிழ் அமைப்புக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு மலையக மக்கள் முன்னணி புதிய வடிவம் எடுக்கவுள்ளதாக முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன தெரிவித்துள்ளார்.

அரசுகளோடும், தேசியக் கட்சிகளோடும் பேரம் பேசக்கூடிய சக்தி மலையக மக்களுக்கு ஏற்பட்டிருப்பதே இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பம். எனினும், இளைஞர்களினதும், புத்திஜீவிகளினதும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத எந்த அமைப்பும் மலையகத்தில் நிலைத்திருக்க முடியாது. இதனையே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தும்- என்றும் அவர் தெரிவித்தார்.

தமது கட்சியின் அரசியல் செயற்றிட்டங்களை சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமெனவும், தலவாக்கலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போது சந்திரசேகரன் கூறியுள்ளார். (ஐ)

# ஜே.வி.பி. - ஜனாதிபதி முரண்பாடு அதிகரிப்பு

கொழும்பு,மே24

பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த சிலருக்கே அரச நிறுவனங்களில் உயர் பதவி வழங்கப்பட்டதை அடுத்து ஜனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளன.

தேர்தலில் தோல்வியுறும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் எவருக்கும் உயர் பதவிகள் வழங்கக்கூடாது என ஜனாதிபதியிடம் ஜே.வி.பியினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தோல்வியுற்ற ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, கம்பஹா மாவட்டத்தில் தோல்வியுற்ற சாலித விஜேசுந்தர, அம்பாறை மாவட்டத்தில் தோல்வியுற்ற எம்.குணசேகரம் ஆகியோருக்கு அரச நிறுவனங்களில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம், கொழும்பில் தோல்வியுற்ற மேர்வின் சில்வாவுக்கு தேசியப் பட்டியல் எம்.பி. பதவி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலில் தோல்வி அடைந்தோருக்கு அரச நிறுவனங்களில் உயர் பதவி வழங்கியது மூலம் தமக்கு ஜனாதிபதி தந்த உறுதிமொழி மீறப்பட்டுவிட்டதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது. (எ-க)

# ரணில் இந்தியா செல்கிறார்

கொழும்பு,மே24

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளார். இந்தியாவுக்கான இவரின் விஜயம் இன்னும் சில வாரங்களில் இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது.

இந்தியத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியின் அழைப்பின்பேரிலேயே இவர் இந்தியா செல்லவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள மன்மோகன் சிங்கைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இவர் எடுத்துக்கூறவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்தியா செல்ல இருப்பது தெரிந்ததே. (எ-க)

# மனித உரிமைகள் தொடர்பாக படையினருக்குக் கருத்தரங்குகள்

## ஆணைக்குழு அதிகாரிகள் வருகின்றனர்

யாழ்ப்பாணம்,மே24

யாழ். மாவட்டத்திலுள்ள படையினருக்கு மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவுப் பணிப்பாளர் நிமால் புஞ்சிகேவி, சட்டத்தரணி கல்யாணதிராகம மற்றும் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய குழுவே இன்று வருகைதரவுள்ளது.

இன்று காலை வருகைதரும் இக் குழுவினர், நான்கு தினங்கள் குடாநாட்டில் தங்கியிருந்து இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் படையினருக்கும் மனித உரிமைகள் தொடர்பான கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

யுத்த காலத்திலும், யுத்தம் ஓய்ந்த பின்னரும் இராணுவத்தினர் கடைப்பிடிக்கவேண்டிய மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் பற்றி இவர்கள் விளக்கமளிப்பர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றொஹான் சந்திரசேகரா தெரிவித்துள்ளார். (ஐ-5)

# கோபுவின் மூன்று நூல்கள் கிளிநொச்சியில் அறிமுகவிழா


யாழ்ப்பாணம்,மே24


முதுபெரும் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) எழுதிய மூன்று நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை', 'அந்த ஒரு உயிர்தானா உயிர்', 'பத்திரிகைத் துறையில் அரை நூற்றாண்டு' ஆகிய நூல்களே ஒரே நேரத்தில் அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளன.

விழாவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

பத்திரிகை உலகில் வீரகேசா! மூலம் அறிமுகமான எஸ்.எம்.கோபாலரத்தினம், ஈழநாடு, ஈழமுரசு, செய்திக் கதிர், காலைக்கதிர், ஈழநாதம், தினக் கதிர் ஆகிய தின, வார இதழ்களின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி வந்துள்ளார். (ஐ-173)







முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 01.05.2002 இல் இடம்பெற்ற கடல் நடவடிக்கையில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் சூரியனின் நினைவுக் கல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நடுகை செய்யப்பட்டது. மேஜர் சூரியனின் திருவுருவப்படம் எடுத்துவரப்படுவதையும் அதற்கு அவரது தாயார் மலர்மாலை அணிவிப்பதையும் நினைவுக்கல்லை சூரியனின் சகோதரர்கள் திரைநீக்கம் செய்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சமுர்த்தி மகாசங்கத்தின் நிறைவேற்றுக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வங்கி மகாசங்க நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று பி.ப. 3 மணிகடு சங்க மண்டபத்தில் நடைபெறுமென சங்க முகாமைத்துவப் பணிப்பாளா ஆ ரகுநாதன் அறிவித்துள்ளார். (எ-117)

## சமய சந்நிதிகளில்

அச்சுவேலி,மே24

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் அடுத்த மாதம் 16ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 17ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (எ-11)

★ ★ ★

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் 75ஆவது வருட வசந்த மஹோற்சவப் பெருவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (எ-86)

★ ★ ★

புலோலி குரும்பைசிட்டி திருவருள்மிகு ஞானவைரவர் ஆலய பஞ்சகுண்ட அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணி தொடக்கம் பிற்பகல் 1.15 மணிவரையிலான சுபவேளையில் நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை அநுராதபுரம் கதிரேசன் கோயில் பிரதமகுருவான சாதகஞானபானு பத்ததி வித்தக சிரோன்மணி சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து நடத்திவைப்பார். (எ-78-173)

★ ★ ★

குடத்தனை,மே24

குடத்தனை மாளிகைத்திடல் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவிற்கான கிரியைகளும், விசேடபூசைகளும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. (எ-78)

★ ★ ★

கோப்பாய்,மே24

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மஹோற்சவம் பத்துத் தினங்கள் நடைபெறும். (எ-72)

# பொது நலவாய நாடுகள் அமைப்பில் பாகிஸ்தான் மீண்டும் இணையும்!

லண்டன்,மே24

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து இடைநிறுத்தப்பட்ட பாகிஸ்தான் ஐந்து வருடங்களின் பின்னர் மீண்டும் அதில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

1999ஆம் ஆண்டு அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு பெர்வேஷ் முஷாரப் இராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்தினார். இதனை அடுத்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் இடைநிறுத்தப்பட்டது.

லண்டனில் நடந்த அந்த அமைப்பின் கூட்டத்தின் பின்னர், பாகிஸ்தான் மீதான தடையை நீக்குவது குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஆராய்ந்து வருகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அல்-கெய்டா அமைப்புக்கும் தீவிரவாதத்துக்கும் எதிரான நடவடிக்கைகளுக்கு அதிபர் முஷாரப் ஆதரவளிப்பதனால் பாகிஸ்தான் மீதான தடையை நீக்கலாம் என்று ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் அதன் முக்கிய கூட்டாளியாகச் செயற்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் டென் மக்கினன் பாகிஸ்தானை மீண்டும் இணைத்துக்கொள்வது குறித்து அறிவித்தார்.

9 உறுப்பினர்களைக் கொண்ட பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்கள் நடவடிக்கைக் குழு பாகிஸ்தான் தொடர்பாக வரவேற்கத்தக்க நகர்வினை மேற்கொண்டுள்ளது என்று அவர் கூறினார். பாகிஸ்தானை மீண்டும் அமைப்பில் இணைத்துக் கொள்வதற்கான இராஜீய நடவடிக்கைகள் சில இன்னும் இருக்கின்றன என்றும் அவர் சொன்னார். அதிபர் முஷாரப் உறுதியளித்தபடி இராணுவத தளபதி என்ற பொறுப்பில் இருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் அவர் பதவி விலகுவார் என்று தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-க)

# படகு கவிழ்ந்து பங்களாதேஷில் நூற்றுக்கணக்கானோர் பலி?

டாக்ககா,மே24

பங்களாதேஷில் பயணிகள் படகு ஒன்று ஆற்றில் கவிழ்ந்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியிருப்பர் என்று அஞ்சப்படுகின்றது.

தெற்கு பங்களாதேஷில் - தலைநகர் டாக்காவுக்கு 170 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கான்பூருக்கு அருகே இருக்கும் மோகனா ஆற்றில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. படகு கவிழ்ந்தபோது அதில் 200இற்கும் மேற்பட்டவர்கள் இருந்துள்ளனர்.

உடனடியாக மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 57 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் நேற்று மதியம் தெரிவித்தனர். அவர்களில் 50 பேர் தாங்களாக நீந்திக் கரை சேர்நதனர். மற்றைய 7 பேரும் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளனர். 8 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. அதிக சுமை காரணமாகவே படகு கவிழ்ந்தது என்று கூறப்படுகின்றது.

தலைநகர் டாக்காவில் இருந்து தெற்கே மடாரிபூர் என்ற இடத்துக்குச் சென்று கொண்டிருந்த பாதையில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு படகு கவிழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. வித்துக்குள்ளானபோது படகில் பெண்கள், சிறுவர்கள் அதிகம் இருந்துள்ளனர். படகுகவிழ்ந்தபோது அதில் பயணஞ்செய்தவர்களில் பெரும்பாலனோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர்.

பங்களாதேஷில் பயணிகள் படகு விபத்து ஒன்றும் புதிதில்லை. மோசமான படகுகளில் அளவுக்கதிகமாகப் பணிகளை ஏற்றிச்செல்வதும் சிறந்த வீதி வசதிகள் இல்லாமையும் அதிக விபத்துக்கள் நடப்பதற்கு காரணங்கள் என்றுகூறப்படுகின்றது.

தற்போது விபத்து இடம்பெற்ற மோகனா ஆற்றில் கடந்த ஆண்டு இடம்பெற்ற படகு வித்துக்குக்களில் மட்டும் 700 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# ஈரான் அதிகாரிகளுடன் தொடர்பு வைத்தார் அதனால்தான் சலாபி வீட்டில் சோதனை!

### அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர்

வாஷிங்ரன்,மே24

அமெரிக்காவுக்கு எதிரான இரகசியத் தகவல்களை ஈரான் உளவுத்துறை அதிகாரிகளுடன் சலாபி பகிர்ந்து கொண்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அதனால்தான் சலாபியின் வீட்டை சோதனையிட்டோம் - என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இது குறித்து அமெரிக்காவிலிருந்து வெளிவரும் செய்தித் தகவல்கள் கூறியதாவது:-

அமெரிக்க அரசு தொடர்பான உளவுத் தகவல்களில் சிலவற்றை ஈரான் அதிகாரிகள் அறிந்துகொண்டனர். ஈராக் நிர்வாகக் குழு ஊறுப்பினர் அகமது சலாபி, ஈரானிலுள்ள உளவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்துள்ளார். அமெரிக்காவுக்கு எதிராக ஈரான செயற்படும் நிலையில் சலாபியின் சந்திப்பு சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இது குறித்து சலாபியிடம் கேட்டும் அமெரிக்காவின் விருப்பத்திற்கு எதிராக அவர் தொடர்ந்தும் நடந்து வருகிறார். ஈரான் அதிகாரிகளிடம் பகிர்ந்து கொண்ட தகவல்கள் குறித்து அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் சலாபியிடம் தெரிவித்தனர். ஆனால், இதை சலாபி மறுத்துள்ளார். இது பாதிஸ்ட் அரசியல் வட்டாரங்களின் திட்டமிட்ட சதி.

இதனையடுத்து, அமெரிக்கப் படையினர் ஈராக் பொலீஸுடன் சேர்ந்து சலாபியின் வீட்டில் அதிரடிச் சோதனை நடத்தினர். ஈராக் நீதிபதி மற்றும் ஈராக்கியர்களின் பரிசோதனை மோசடியை அடுத்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

- இவ்வாறு அமெரிக்க செய்தித் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த வியாழக்கிழமை சலாபியின் வீட்டில் அமெரிக்கப் படையினரின் பின்னணியுடன் ஈராக்கியப் பொலீஸார் சோதனை நடத்தினர். சலாபியின் வீட்டிலிருந்த கணனி மற்றும் ஆவணங்களை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட ஈராக்கிய ஆளுநர் சபையின் ஒரு முக்கிய உறுப்பினர் சலாபி. முன்னர் இவர் அமெரிக்காவுக்கு மிக நெருக்கமானவராக இருந்தவர். ஆனால், இப்போது அவர் ஈராக்கிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பாடுகின்றார் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது. ஈராக்கின் அடுத்த தலைவராக தான் வருவதற்கு சலாபி கடும் முயற்சி செய்து வருகின்றார். அதனால், அவர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகவும் அமெரிக்கர்களுக்கு எதிராகவும் செயற்பட முற்படுகின்றார் - என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இல்லையேல் ஈராக்கியர்களின் ஆதரவைத் தான் பெற முடியாது என்று அவர் கருதுகின்றார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ-க)

## ரூபா 80 கோடிக்கு விலைபோன ஓவியம்

நியூயோர்க்,மே24

ஸ்கொட்லாந்து எழுத்தாளர் ரொபர்ட்லூயிஸ் ஸ்டீவன்சனின் ஓவியம் இலங்கைப்பணத்தில் சுமார் எண்பது கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

1885ஆம் ஆண்டு அமெரிக்க ஓவியர் ஜான் சிங்கர் சார்ஜெண்ட் இந்த ஓவியத்தை தீட்டி இருந்தார். இது நியூயோர்க் நகரில் ஏலம் விடப்பட்டது.

சூதாட்ட விடுதி நடத்தும் ஸ்டீவன்சன் என்பவர் இந்த விலை கொடுத்து அதை ஏலத்தில் வாங்கினார். (ஐ-க)

# ஐ.நா. அல்லது ஈராக் மக்கள் கேட்டால் ஈராக்குக்கு பாக். படைகளை அனுப்பும்

### அந்நாட்டு வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு

வாஷிங்ரன்,மே24

ஐ.நா. அல்லது ஈராக் மக்கள் கேட்டுக்கொண்டால் ஈராக்குக்குப் படைகளை அனுப்புவதுபற்றி பரிசீலனை செய்வோம் என பாகிஸ்தான் கூறியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கசூரி கடந்தவெள்ளிக்கிழமை கூறியதாவது:-

ஈராக்கில் நிலவும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புப் படையில் சேர இதுவரை எமக்கு அழைப்பு ஏதும் வரவில்லை. வேறு சில நாடுகளுக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஈராக்குக்குப் படைகளை அனுப்புவதை பாகிஸ்தான் மக்கள் விரும்பவில்லை. ஏனென்றால ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்காவுக்கு அது உதவுவது போலத்தான் இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஈராககில் 30ஆம் திகதிக்குப் பின்னர் அமையவுள்ள அரசு ஈராக் மக்களின் ஆதரவைப் பெற்றதாக இருக்க வேண்டும். உலகில் அமைதியை ஏற்படுத்த உதவுவதில் தனது பொறுப்பை பாகிஸ்தான் தட்டிக் கழித்ததில்லை.

உலகில் 14 இடங்களில் செயற்படும் ஐ.நா. அமைதிப் படையில் 8 இடங்களுக்குப் பாகிஸ்தான் வீரர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். - என்றார். (ஐ-க)



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் 13 ஆவது சிரார்த்த தினமான வெள்ளக்கிழமை அவரது சமாதியில் நடைபெற்ற நினைவுப் பிரார்த்தனையில் திருமதி சோனியா காந்தி, மகன் ராகுல் காந்தி ஆகியோர்..

# விமான நிலையக் கூரை நொறுங்கி பரிஸில் நால்வர் பலியாகினர்!

பரீஸ்,மே24

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள சார்ள்ஸ் டி கவுல் விமான நிலையத்தின் கூரை நொறுங்கி வீழ்ந்ததில் குறைந்தது 4 பேர் உயிரிழந்தனர்.

விமான நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. சர்வதேச விமான நிலையமான இதில், விபத்து இடம்பெற்றதன் பின்னர் உடனடியாகப் போக்குவரத்துக்கள் ரத்துச் செய்யப்பட்டன.

பிரான்ஸ் போக்குவரத்துத்துறை அமைச்சர் சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். இந்த விபத்தில் 5 பேர் பலியாகினர் என்றும் மேலும் மூவர் காயமடைந்தனர் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது. அது உறுதிப்படுத்தப் படவில்லை. (ஐ-க)

# ஆப்கான் எல்லையில் அமெரிக்கப்படைகள் அத்துமீறி பாகிஸ்தானுக்குள் நுழைகின்றன!

### அந்நாட்டு அதிகாரிகள் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,மே24

அமெரிக்கப்படைகள் ஆப்கான் எல்லையோரமாக அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்துகின்றன என்று பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் இராணுவப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் சவுக்கத் சுல்தான் கூறியதாவது:-

பாகிஸ்தானுக்கு வடக்கே வசீரிஸ்தான் மலைப்பிரதேசத்தில் உள்ள எல்லையோரக்கிராமத்தில் அமெரிக்கப்படைகள் நுழைந்தன. அங்குள்ள வீடுகளில் அதிரடி சோதனை நடத்திவிட்டு ஆப்கானுக்கு திரும்பிச் சென்றுவிட்டன.

இது தொடர்பாக எங்களது கண்டனத்தை அமெரிக்காவுக்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டோம். இதே பகுதியில் இந்த மாத ஆரம்பத்திலும் அமெரிக்கப்படைகள் அத்துமீறி நுழைந்தன. கடைகள், வீடுகள், பெற்றோல் ஸ்ரேஷன்கள் ஆகியவற்றில் அதிரடிச் சோதனை நடத்தின.

அமெரிக்கப்படைகள் எல்லையில ஊடுருவி சோதனை நடத்திய போது பீரங்கித் தாக்குதல் நடத்தவில்லை - இவ்வாறு சவுக்கத் சுல்தான் கூறினார்.

இதற்குப் பதிலடியாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையிடமான பெண்டகன் கூறியுள்ளதாவது:-

அதிரடிச் சோதனை நடத்துவது தவிர்க்கமுடியாதது. அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ள மலைப் பிரதேசங்களில் பதுங்கிக் கொண்டு ஆப்கானில் உள்ளவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என்று அமெரிக்க, ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானில் உள்ள அடர்ந்த மலைப் பிரதேசங்களில் பதுங்கியுள்ள அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளை ஒழிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் சபதம் நிறைவேற்றினார். இதையடுத்துத்தான் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டது.

- இவ்வாறு பெண்டகன் அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் நட்பு நாடாக பாகிஸ்தான் கைகோத்துக் கொண்டுள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு தலிபான் தீவிரவாதிகளையும் மறறும் அல்கெய்டா தீவிரவாதிகளையும் அவர்களுக்கு உதவுபவர்களைப் பிடிப்பதற்காக அமெரிக்கா தனது படையை ஆப்கானிஸ்தான் எல்லையில் நிறுத்தியது. அப்போது வெளிநாட்டுப் படைகள் ஊடுருவாமல் தடுக்கத்தான் நாங்கள் வலை விரித்திருந்தோம். அத்துமீறி அடுத்த நாடுகளில் நுழையமாட்டோம் என்று அமெரிக்கா கூறியது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

### கண்ணிவெடியில் சிக்கி

# காஷ்மீர் மாநிலத்தில் 20 படையினர் பலி!

புதுடில்லி,மே24

இந்தியாவின் வடக்கு மாநிலமான ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் குறைந்தது 20 இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். வேறு 12 பேர் காயமடைந்தனர்.

மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் இருந்து 74கிலோ மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படையினர் பயணஞ் செய்துகொண்டிருந்த பஸ் கண்ணியில் சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

கண்ணியில் சிக்கிய பஸ் உருக்குலைந்து போனதுடன் தீப்பற்றி எரிந்தது எனறு அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஹிஸ்புல்லா முஜாஹ்தீன் என்ற அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது. இராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமது மூத்த தளபதிகளுக்கான பழிவாங்கல் இது என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஐ-க)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில், நல்ல நிலையிலுள்ள HERO HONDA CD 100 SS விற்பனைக்குண்டு. வார நாள்களில் மாலை 4.00 மணிக்குப் பின்பும் சனி, ஞாயிறு முழுநாளும் பார்வையிடலாம். தொடர்பு: 22, சுவாமி யார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப் பாணம். T.P.: 3811 (32202)

நல்ல அழகான Great Dane X Dobermann Pincher நாய்க்குட்டிகள் (2½ மாதம்) 2 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32514)

11ஸ்ரீ 5... கொரில்லா கார் விற்ப னைக்குண்டு. தொடர்பு: 19/1, B.A தம்பி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் T.P.: மோகன் - 021 222 2453 (32247)

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், பூச்சாடி கள், பூங்கன்றுகள், மஞ்சள் மொசந் தூஸ், டல்மேசன், அல்சேசன் நாய்க குட்டிகள், நாய்க்கூடுகள், லவ்பேட்ஸ், குருவிக்கூடுகள், விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம். (32186)

கொழும்பு, தெஹிவளையில் காலி வீதிக்கு அருகில் (LAND SIDE) புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் தொடர்மாடி வீட்டுத் தொகுதி யில் வீடுகள் பகுதி பகுதியான கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் விற் பனைக்குண்டு. சில வீடுகள் மாத் திரமே எஞ்சியுள்ளதால் முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள். தொடர்பு: R.கலிகோகுலன். T.P.: 0776159927, 021 222 2104, 077 6315699.(சி-31150)

அளவெட்டியில் நல்ல சுற்றாட லில் வீடு கட்டக்கூடிய 3½ பரப்புக் காணியும் வீடுகட்ட, தோட்டஞ் செய் யக் கூடிய 7½ பரப்புக் காணியும் விற் பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மச்சந் திரன், அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. தொலைபேசி: 0776 258191.(32529)

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் நம்பர் 1 பகிரா இன புறோயிலர் குஞ்சுகளும் 28.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவு களை முன்கூட்டியே மேற்கொள்ள வும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.(32548)

### மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான பெண்ணுக்கு 37-45 வயதுக்கு இடைப்பட்ட உத்தியோக, ஆசிரிய, சுயதொழில் மணமகன் தேவை. சிறந்த சீதனம் வழங்கப்படும. இங்கிலாந்துப் பிரஜையான முகாமைத துவ, இங்கிலாந்து பட்டதாரியான நற் குணம் வாய்ந்த தம்பியார் மாற்றுச் சம்பந்தத்துக்கும் இடமுண்டு. தொடர்பு: வி.இல. 2272 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32234)

### மணமகன் தேவை

1974இல் பிறந்த, 5' 6" உயரம் உடைய, கொழும்பில் அரச தொழில புரியும் சைவ போசனம் உடைய சிவந்த பெண்ணிற்கு சைவ போசன முடைய, நிரந்தர வருமானமுடைய, நற்குணம் வாய்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம் தொடர்பு: 0777 - 158972. (32104)

### தவறிவிட்டது

திருமதி சின்னையா என்பவரது தாலிக்கொடி ஒன்று, மட்டுவில் அரச டிச் சந்தியில் இருந்து மோகனதாஸ் ஒழுங்கை ஆகிய பாதைகளில் 20.05.2004 வியாழக்கிழமை தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: மு.சின்னையா, மானவளை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (32521)

க.விக்னேஸ்வரானந்தன் என் பவருடைய பயணப் பை ஒன்று 22.05.2004 சனி மாலை 4 மணியள வில் முகமாலையிலிருந்து யாழ் வந்த பஸ்ஸில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் 20/4, சிவகுருநாதா லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவ வும் அல்லது 0777238748, 0777 550869 ஆகிய தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (32552)

### வாடகைக்கு

பிரத்தியேக வழி உள்ள மேல் மாடி வாடகைக்குண்டு. (கந்தோர் பாவ னைக்கு மட்டும்). தொடர்பு: இராசா வாமதேவன். [illegible] 222 3239.(32167)

---

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு

வையத்துள் 09 - 02 - 1932



வானுலகில் 04 - 06 - 2003

அமரர்

**கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்**

(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் சோலைவரிப்பகுதி - யாழ். மாநகரசபை)

திதி: 24.05.2004

பாசஒளி வீசுகின்ற பண்பு மிகு சூரியனாய்
பைந்தமிழ் பாரினிலே பாங்கோடு அவதரித்தீர்!
நேசமுடன் எம் சமூக நெறிமுறைகள் கடைக் கொண்டு
நெகிழ்வோடு ஊர் போற்ற நேர்வழியில் வாழ்ந்திட்டீர்!
மாசற்ற சேவைபல மாநகர சபை மூலம்
மாண்பு மிகு தமிழருக்கு மகிழ்வுடனே உவந்தளித்தீர்!
வாசமிகு மனைவி, மக்கள் வளமான சொந்தமென
வாழ்க்கை என்னும் சாலை தன்னில் வனப்போடு பயணித்தீர்

கண்ணெனவே பிள்ளைகளைக் கல்வியிலே தானுயர்த்தி
கருத்தோடு உயர் பதவி வகிக்க வைத்தீர்! சாதனைதான்
மண்ணகத்தில் பிள்ளைகளின் மகத்துவத்தைப் பார்க்காமல்
மாவிண்ணில் கலந்திட்டீர்! இது எமக்கு வேதனைதான்.
எண்ணமெலாம் துயருடனே எழில் நாரந்தனை
கர்ணந் தோட்டத்தில்
எழுந்தருளும் கந்தனது திருப்பாதம் தனைத் தொட்டு
திண்ணமாய் நீங்கள் தந்த திகழொளி பாதை தன்னில்
திறமையாய் வாழுகின்றோம் தினமும் உம் நினைவுடனே.

*118/4, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

என்றென்றும் நீங்கா நினைவுடன்:
**மனைவி, மக்கள், மருமகன்.**

(32547)(38-16-19-24)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது இசை நிறுவனத்தில் இசை பயில்கின்ற மாணவியாகிய
செல்வி கலைவாணி *(கலா)*
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நேசராஜன் நாகேஸ்வரி**

*(ராணி, பெத்தானியா சுவிஷேச சபை)*

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*16/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*உயரப்பலம், ஆனைக்கோட்டை.*

**ஆசிரியர்கள், மாணவர்கள், நியூ வீணா கானம் இசை மன்றம்.**

(32549) (26-16-29-24)

---

## 5ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 11 - 01 - 1981



மறைவு 24 - 05 - 1999

அமரர்

**இராஜகோபால் கங்கேசன்**

(கங்கு)

(கொக்குவில் இந்துக் கல்லூரி – A/L 99 வர்த்தகப் பிரிவு மாணவன்)

கூடிக் களித்திருந்தாய் எம்கங்கு! - நிதம் கண்கள்
தேடிப் பார்க்கின்றன உனையிங்கு!
காது மடல்கள் குவிந்து கூர்மையாகின்றன
வருமோசை உன் காலடி ஓசையா என்று?

ஆசையாய் எம்முடன் நீ தவழ்ந்து உன்
அன்பினால் எல்லோரையும் நீ ஆண்டு
ஓசையின்றியே நீ எமையெலாம் விட்டகன்று
ஆண்டுகள் ஐந்து அரங்கியதோ?

29, சம்பியன் லேன்,
கொக்குவில். (32251) (26-16-19-24)

**- குடும்பத்தினர்.**

---

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
Marathanarmadam, Jaffna.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

சகல கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் எதிர்வரும் (06-06-2004) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

- சர்வதேச அங்கீகாரம்
- ஆழமான கற்பித்தல்
- அமைதியான சூழல்

*இதுவரையில்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்*

T.P. No: 021 4590222

Director
eTouch COMPUTER SYSTEM
Marathanarmadam, Jaffna.

(32226)(32-16-19-24)

---

உ
தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

தாரண வருஷம் 29 வது ஆண்டு

## வைகாசி மஹோற்சவ பெருவிழா 2004



| | | |
|---|---|---|
| 24.05.2004 | திங்கள் | முற் பகல் 10.00 மணி கொடியேற்றம் |
| 28.05.2004 | வெள்ளி | மாலை 07.00 மணி பூச்சப்பறம் |
| 29.05.2004 | சனி | மாலை 07.00 மணி வசந்தஉற்சவம் |
| 31.05.2004 | திங்கள் | பிற்பகல் 03.00 மணி வேட்டைத்திருவிழா (ஸ்ரீ ஞான வைரவர் ஆலய முன்றலில்) மாலை 07.00 மணி சப்பறம் |
| 01.06.2004 | செவ்வாய் | முற்பகல் 10.00 மணி தேர்த்திருவிழா (மதியம் அன்னதானம்) |
| 02.06.2004 | புதன் | நண்பகல் 12.30 மணி பூரணை தீர்த்த உற்சவம் மாலை05.30 மணிக்கு திருவூஞ்சல், 06.00 மணிக்கு கொடியிறக்கம் தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவம் |
| 03.06.2004 | வியாழன் | மதியம் அன்னதானம் மாலை 07.00 மணி பூங்காவனம் |
| 24.06.2004 | வெள்ளி | காலை பிராயச்சித்தஅபிஷேகம், மாலை 07.00 மணி வைரவர் மடை. |

மஹோற்சவ பிரதம குரு
'கிரியா சிரோன்மணி'
*சிவஸ்ரீ.சதா.நித்தியானந்தக் குருக்கள்*

திருக்கோயில் நித்திய பூசகர்
*சிவஸ்ரீ.சிவ.மகேஸ்வரக் குருக்கள்*
*(தில்லையம்பதி)*

மங்கள இசை
என்.ஆர்.கே.இரத்தினகுமார் குழுவினர்
(இணுவில்)

குறிப்பு : தேர்த்திருவிழா அன்று மு.ப.11.30 மணிக்கு இராஜகோபுர திருப்பணிக்கான அங்குரார்ப்பண வைபவம் இடம்பெறும்.

**தீர்த்தத்திருவிழா அன்று மஹாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா பி.ப 03.00 நடைபெறும்.**

*தினமும் இரவு 08.00 மணி முதல் 09.00 மணி வரை தெய்வீகப் பேருரை நடைபெறும்.*

*தில்லையம்பதி.*
*23.05.2004.*

இங்ஙனம்
பரிபாலனசபை.

'தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்'

உதயன்

## பொருளாதாரச் சிக்கல்

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் நோக்கத்தை எட்டுவதற்காகத் தாம் மேற்கொண்ட அதிகாரக் குளறுபடித்தனங்களால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தில் தன்னையும், நாட்டையும் 'ஆப்பிழுத்த குரங்கின்' நிலையில் கொண்டு போய் மாட்டி விட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்று இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

அமைதி முயற்சி விடயத்தில் மட்டுமல்ல மீளமுடியாத பொருளாதார நெருக்கடிக்குள்ளும் நாட்டை அவர் மாட்டி விட்டிருக்கிறார்.

பொதுவாக சாதகம் கணிப்போர் சாதகரின் மீதான சனீஸ்வரனின் ஓர் ஆட்சிக்காலத்தை ஏழரையாண்டுகள் என்பர். அதுபோன்று 1994 மத்தியில் ஆரம்பமான ஜனாதிபதி சந்திரிகா அரசின் முதல்சுற்று ஆட்சி 2001 டிசெம்பரில் ஐ.தே.முன்னணி அரசின் வெற்றியோடு முடிவுக்கு வந்தது. அந்த ஏழரை ஆண்டுகால ஆட்சியின் பின்னர் கஜானா காலி என்ற நிலையிலேயே தாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கின்றார்கள் என்று அப்போதே ஐ.தே.மு. அரசின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஏழரை ஆண்டுகாலம் யுத்தமுனைப்போடு - போர் வெறியோடு - சந்திரிகா நடத்திய ஆட்சியினால் விழுந்த பொருளாதாரத்தை - யுத்தத்தின் பெயரால் வகை தொகையின்றி வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடனை அடைத்து நிலைமையைச் சீர்செய்து - நிமிர்த்துவதற்கு தமக்குக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது தேவை என்றும் -

அதற்குப் பின்னரே பொருளாதார மீட்சியையும், சமாதானத்தின் பொருளாதாரப் பயனையும் நாட்டுக்குப் பெற்றுத்தரமுடியும் என்றும் -

2001 டிசெம்பரில் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் சமயத்தில் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால், பொருளாதார மீட்சிக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ரணிலின் அரசு முற்றாக நிறைவுசெய்ய முன்னரே தமக்கிருந்த நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி சகலதையும் குட்டிச்சுவராக்கிவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இப்போது நாட்டை வறுமையிலிருந்து மீட்கும் பொருளாதாரக் கொள்கைகளைத் தன்னுடைய அரசுடன் சேர்ந்து வகுப்பதற்குப் பொருத்தமற்ற ஒரு தரப்பை தனது கூட்டரசில் பிரதான பங்காளி அணியினராக வைத்துக் கொண்டு திட்டங்களை முன்னெடுக்கவும் முடியாமல் பின் வாங்கவும் இயலாமல் தள்ளாடுகிறது இந்த அரசு.

சமாதான முயற்சிகளின் நிச்சயமற்ற - குழப்பகரமான - நிலையினால் மீண்டும் நாடு யுத்த செலவினத்துக்காகப் பெரும்நிதியைக் கொட்டிக்கொடுக்க வேண்டிய இக்கட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மீண்டும் யுத்தம்வெடிக்குமோ, இல்லையோ, சமாதான முயற்சிகளில் காணப்படும் தடுமாற்றம் காரணமாக சிக்கலான போக்குக் காரணமாக - எந்நிலையையும் எதிர்கொள்ளக் கூடியதான யுத்த ஆயத்தங்களைச் செய்ய வேண்டியநிலைக்குப் பாதுகாப்புத் தரப்புத் தள்ளப்பட்டுள்ளது என்கின்றனர் அவர்கள்.

பொருளாதார விவகாரங்கள் தொடர்பாக இந்த அரசின் குழப்பமான கொள்கைகள் காரணமாக நிதி அமைச்சருக்கும் நிதி அமைச்சுச் செயலாளருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள லடாய் பகிரங்கமாகியுள்ளது.

நிதிநெருக்கடி காரணமாக அடுத்தடுத்த மாதங்களில் அரச ஊழியருக்கு மாதாந்தச்சம்பளத்தை வழங்குவதற்குக் கூட அரசு இக்கட்டை எதிர்நோக்கும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

நிலைமையைச் சமாளிப்பதற்காக தேசிய சொத்துக்கள் சிலவற்றை தனியார்மயப்படுத்த நிதி அமைச்சர் விரும்புகின்றார். ஆனால், அதற்கு எதிராக அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. போர்க்கொடி தூக்குகின்றது; சட்டச் சிக்கல்களைக் காரணம் காட்டுகின்றனர் நிதி அமைச்சின் அதிகாரிகள்.

இப்போது உலக சந்தையில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் விலை உயர்வுக்கு ஈடுகொடுப்பதே அரசுக்கு பெருங்காரியமாக இருக்கப்போகின்றது. ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கவிருக்கும் இச்சமயத்தில் உலக சந்தையில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள விலை உயர்வை மக்கள்மீது கட்டியடிப்பதை தற்காலிகமாகத் தவிர்க்க அரசு விரும்புகிறது. எனவே, விலை அதிகரிப்பால் ஏற்படும் துண்டுவிழும் தொகைக்கு இந்தியாவிடம் கையேந்துகிறது அரசு.

இந்தப் பொருளாதாரச் சீத்துவத்தில், கடந்த தேர்தலுக்கு முன்னர் தனது கூட்டமைப்பு வாரி இறைத்த வாக்குறுதிகளை - முப்பதாயிரம் இளைஞருக்கு உடனடி வேலை வாய்ப்புவழங்கல் போன்ற 'வாய்ப்பந்தல்' விவகாரங்களை - செயற்படுத்தவும் முனைவதுபோல அரசு தன்னைக் காட்டிக்கொள்கின்றது.

சமாதான முயற்சிகள் முன் நகர்ந்தால் சர்வதேச சமூகம் உறுதியளித்துள்ள - சுமார் 45 ஆயிரம் கோடி ரூபா - நிதி உதவி கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சி விவகாரத்தில் அரசு வெளிப்படுத்தும் முன்னுக்குப் பின் முரணான கொள்கைப் போக்கினால் அந்த முயற்சிகளும் தடங்கல்பட்டு முடங்கிப் போய்க் கிடக்கின்றன. அதனால் சர்வதேச உதவி கிட்டுவதும் தடைப்பட்டு போய்க் கிடக்கிறது.

வரும் காலத்தில் நாடு முன்னெப்போதுமில்லாதவாறு மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கப் போகின்றது. இதிலிருந்து எப்படி நாடு மீளும்.?

விடயங்களைப் போட்டு அடித்துக்குழப்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான் தீர்வைக் காணவேண்டும்.

# வடக்குக் கடலில் தாயக மீனவருக்குள்ள இறைமையை விட்டுக் கொடுப்பதில்லை!

## மீனவர் கூ.சங்க சமாச சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே24

வடபகுதிக் கடலில் தாயக மீனவர்களுக்குள்ள இறைமையையும் மீன்பிடிக்கும் எல்லையையும் எந்த விதத்திலும் விட்டுக்கொடுப்பதில்லை என்று யாழ். மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனக் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய மீனவர்களிடையே தொழிலில் இருந்து வரும பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து சுமுகமான முடிவு ஒன்றைக்காணும் முகமாக அடுத்தவாரம் இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இப்பேச்சுக்களின்போது குறிப்பாக யாழ். மாவட்ட மீனவர்கள் சார்பாக என்னென்ன விடயங்களை வலியுறுத்திப் பேசுவது என்பதுபற்றி சம்மேளனக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் எஸ்.வென்ஸஸ் லோஸ் தலைமையில் யாழ். பிரதான வீதியிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெற்றது

கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ பேச்சுக்களின்போது இருதரப்பினருக்குமிடையே உள்ள பிரச்சினைகளை மட்டுமே ஆராய்வதுடன் குறிப்பாக தொழில் நடவடிக்கைகளைக் குறித்தே பேசப்படும்.

★ இரு தரப்புப் பேச்சுக்களில் யாழ். மாவட்டத்திலுள்ள பத்து மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசங்களிலிருந்தும் தலா ஒருவர்வீதம் பத்துப் பேர் கலந்துகொள்வர். அவர்கள் பெயர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

★ கச்சதீவு உரிமை தொடர்பாக எதுவும் பேசுவதில்லை. அது இலங்கை - இந்திய அரசுக்குரிய விவகாரம். எனவே, அது குறித்துப் பேசுவதில்லை.

★ வடமாகாண கூட்டுறவுச்சங்க சமாசம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்துடன் விரைவில் இணைக்கப்படும்.

சமாசத்தின் தலைவராக இருந்த எஸ்.தவரட்ணம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்துக்குள் உள்வாங்கப்படுவார். (ஐ-173)

# வற்றாப்பளை ஆலய பொங்கல் விழா இம்முறை சிறப்புற நடைபெற ஏற்பாடு

முல்லைத்தீவு,மே24

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா எதிர்வரும் 31ஆம் திகதி மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

நேற்று ஆலயமுன்றிலில் உள்ள நந்திக்கடலில் தீர்த்தமெடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

1996ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினரின் கெடுபிடிகளால் இந்த ஆலயத்தின் பொங்கல்விழா பெரும் கொண்டாட்டமாக நடைபெறுவதில்லை.

விடுதலைப் புலிகளினால் 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம 'ஓயாத அலைகள் - 01' நடவடிக்கை மூலம் முல்லைத்தீவு நகரம் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் இராணுவ அச்சுறுத்தல் நீங்கிய நிலையில் - வற்றாப்பளை கண்ணகை ஆலய பொங்கல் விழா சிறப்பாக ஆண்டுதோறும் இடம்பெற்று வருகிறது.

1992 ஆம் ஆண்டு இந்த ஆலய பொங்கல்விழா இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது முல்லைத்தீவு நகரில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பல அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

போரின் அழிவுகளில் இருந்து முல்லைநகரம் மீண்டெழுந்து வருகிறது. இந்நிலையில் வன்னியின் முக்கிய வழிபாட்டுத் தலமான வற்றாப்பளை கண்ணகை ஆலய வருடாந்த பொங்கல் விழா இம்முறையும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

பொங்கலுக்கு முந்திய நிகழ்வான பாக்குத்தெண்டுதல் பணி கடந்த 17 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

வருடாந்தப் பொங்கல் உற்சவத்தையொட்டி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான பக்தர்கள் திரளுவார்கள் என எதிர்பார்த்து கோயில் சுற்றாடலில் விசேடமாகக் குடிதண்ணீர், சுகாதாரவசதிகளை கோயில் பரிபாலனசபையினர் பூர்த்திசெய்துள்ளனர்.

பொங்கலன்று பறவைக்காவடி, தூக்குக்காவடி ஆகியன எடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற விரும்புபவர்களும் காவடிச் சொந்தக்காரர்களும் அதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு வசதியாக முன்கூட்டியே பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு வற்றாப்பளை கண்ணகை அம்மன்கோயில் பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-12-173)

## நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேசங்களில் உலகவங்கி உதவியுடன் 25 வீடுகள்

யாழ்ப்பாணம்,மே24

உலகவங்கியின் முன்னோடி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 25வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய முன்முயற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் அரியாலை மத்தி ஜே-96 கிராம அலுவலர் பிரிவிலும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்புத்துறை ஜே-62 கிராம அலுவலர் பிரிவிலும் இந்தவீடுகளை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இப்பகுதிகளில் வசிக்கும் வீடு பெறுவதற்குத் தகுதியானவர்களின் முதன்நிலை தரவுகளை சேகரிக்கும் பணியில் கிராம அலுவலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராமிய புனர்வாழ்வுக்குழு உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தவீடுகள் யாவும் ஆண்டு இறுதிக்குள் நிர்மாணிக்கப்பட்டு விடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-86)

## மோட்டார் சைக்கிள் சிப்பாயை மோதியது; இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,மே24

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் நடந்து சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாயுடன் மோதி வீழ்ந்ததில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் பிரஸ்தாப சிப்பாயும் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை கைதடிப்பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

நல்லூர் சிவன்கோவிலடியைச் சேர்ந்த சிவகடாட்சம் செந்தில் நாதசர்மா (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம் காலை கைதடிப் பாலத்தினூடாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் அப்பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்த இராணுவச் சிப்பாயை பின்பக்கமாக மோதினார் எனவும், இதனால், பிரஸ்தாப இளைஞர் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு கீழே வீழ்ந்து படுகாயமடைந்தார் - என்றும் கூறப்பட்டது.

மோட்டார் சைக்கிள் மோதிய சிப்பாயும் படுகாயமடைந்த நிலையில் இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். (ஐ-4-7)

வருடாந்த உற்சவம் நாளை தொடங்குகிறது

## கொல்லங்கலட்டி ஆலயம் செல்ல போக்குவரத்து வசதி செய்யப்படும்

வலி.வடக்கு,மே24

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவை கொல்லங்கட்டி பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்கள் ஆலயத்திற்குச் சென்று வருவதற்காக பாதுகாப்பு வலயத்தினுள் பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆலய உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேறறத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 4 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

ஆலயத்திற்கு வரும் அடியார்களின் நன்மைகருதி திருவிழா நாள்களில் நண்பகல் நேரத்தில் அன்னதானம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் காலையிலும் மாலையிலும் திருவிழாக்களுக்கு வந்து திரும்புவதற்கு வசதியாக காலை 8.00 மணிக்கும் பிறபகல் 2.00மணிக்கும் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து பஸ்சேவை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஆலய அறங்காவலர் குழுவினர் செய்துள்ளனர். (ஐ-86)

**நாளை**

வைகாசி 12
செவ்வாய்க்கிழமை
(25.05.2004)
திதி : ஷஷ்டி
முன்னிரவு 08.35 வரை.
ஷஷ்டி விரதம்
நட்சத்திரம் : பூசம்
பகல் 08.52
சுபநேரம்: 10.22 - 11.52
ராகுகாலம்: 02.52 - 4.22
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வெளிச்சத்தைப் பார்;
விளக்கைப் பார்க்காதே.

## கதிகால் நட தரையை அகழ்ந்தபோது பெரும் வெடிகுண்டு வெளிப்பட்டது!

### மட்டுவில் வடக்கில் பரபரப்பு

சாவகச்சேரி,மே24

வீட்டுவளவில் வேலிபோடுவதற்காகத் தரையை மண்வெட்டியால் தோண்டியபோது பெரும் வெடிகுண்டு ஒன்று வெளிப்பட்டிருக்கின்றது. இளம்பெண் ஒருவரே மண்வெட்டிமூலம் இந்தக் குண்டை அகழ்ந்து வெளியே எடுத்திருக்கிறார்.

மட்டுவில்வடக்கு, பனையடிப் பிள்ளையார்கோவில் ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டிலேயே இந்த வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கிளைமோர் ரக குண்டாக இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பிரஸ்தாப பெண் தரையை கொத்தியபோது நீண்ட குழாய் போன்ற ஒருபொருள் வெளிப்பட்டது என்றும் -

அது வெடித்தகுண்டு ஒன்றின் வெற்றுப் பரலாக இருக்கக் கூடும் என எண்ணி தரையைமேலும் அகழ்ந்து அதனை வெளியே எடுத்தார் எனவும் - கூறப்படுகிறது.

இந்தக் குண்டுடன் வயர்கள் இணைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அவர் அதிர்ச்சியுற்றார்.

வெளியே எடுக்கப்பட்ட குண்டு தற்போது அந்த வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. ஆபத்தை உணராத பொதுமக்கள் அதனைச்சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து கனகன்புளியடியில் உள்ள படைமுகாமுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இப்பிரதேசம் இராணுவத்தினரின் முன்னரங்கநிலைகள் அமைந்த பகுதியாகக் காணப்பட்டது.

தற்போது வெடிபொருள் மீட்கப்பட்ட பகுதிக்கு அருகே ஏற்கனவே நான்குவெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

இப்பிரதேசம் இராணுவப் பொறியியல் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-31)

# இதய அஞ்சலி



"நாடகமணி"

**சாமிநாதபிள்ளை மார்சலீன்பிள்ளை**

**(செல்வராஜா மாஸ்ரர்)**

எனது நாடக வாழ்க்கைக்கு அரிச்சுவடி எழுதி - என்
கலையுலகு பிரகாசிக்கச் செய்து
என்னை வாழ வைத்த தெய்வத்துக்கு.

பிரபல நாடகநடிகர்,
ஆங்கில நூல் ஆசிரியர்,
சாகித்திய பரிசு எழுத்தாளர்
**இராசையா பஞ்சலிங்கம்**
(பருத்தித்துறை கலைஞர் வட்டம்).

பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி-35154) (24-13)

# 25ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 12 - 03 - 1912

மறைவு 31 - 05 - 1979

அமரர் **மா.குருசாமிஐயர்**

(இளைப்பாறிய ஆசிரியர், யா/கைதடி குருசாமி வித்தியாலயம்)

திதி: 24-05-2004

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*வாழ்ந்த எம் தெய்வமே!*
*ஆண்டுகள் இருபத்தைந்து*
*ஓடி மறைந்தாலும் உங்களின்*
*நினைவுகள் மட்டும் எங்களை*
*விட்டகலாது.*

கைதடி வடக்கு,
கைதடி.
(32041) (26-13-24)

**- மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## உதைபந்தாட்டத்தில் இன்று

யாழ்ப்பாணம்,மே24

தமிழீழ விளையாட்டுத் துறை மற்றும் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசர ணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மணற்காடு சென். அன்ர னீஸ் விளையாட்டுக்கழகமும் மோத வுள்ளன. (ஐ-5-173)


**CHEMISTRY**

⇨ அடிப்படையிலிருந்தான துரித மீட்டல்

✪ Past paper ✪ Model Paper

DIAS B.Sc. (Hons) (Spl. in Chem.)

**104/4, Cross Rd., Athiyady.**



**தொடர்புகொள்ளவும்**

*இயந்திரம் மூலம் குழாய்க் கிணறு அகழ்பவர்கள் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.*

தொடர்பு:

**றூலின்ஸ்**


6, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 5534.

(32541) (26-13-24)


## திருத்தம்

நேற்றைய உதயனின் (23.05.2004) 14ஆம் பக்கத்தில் பிரசுரமான **திருமதி சிவக்கொழுந்து செல்லையாவின்** மறைவு தொடர் பான கண்ணீர் அஞ்சலி விளம்ப ரத்தில், விளம்பரத்தைப் பிரசுரித் தோரின் விவரம் 'உதவி அரச அதி பரும், ஊழியர்களும், உதவி அரச அதிபர் பணிமனை, காரைநகர்' என்று இருக்கவேண்டும். அது தவறுதலாக 'உதவி அரச அதி பரும், ஊழியர்களும், உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற் றுறை' என அச்சாகி உள்ளது. திருத்தி வாசிக்கவும்.

# 16ஆவது ஆண்டு நினைவு நாள்



*வீரப்பிறப்பு* 30 - 11 - 1966

*வீரச்சாவு* 24 - 05 - 1988

# கப்டன் நகுலன்/குழந்தை

(தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்)

# வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்

*மீசாலை வடக்கு, கொடிகாமம். (கண்டாவளை)*

*வீரனே! விடியும் வேளை நெருங்குகிறது!*
*விலகுகின்றன கரு முகில்கள்!*
*உன் அழகு முகம் எங்கள் நெஞ்சங்களில்!*
*உன் பாதச் சுவடுகளில் பதியும் எம் பாதங்கள்!*
*பதினாறு ஆண்டுகளென்ன!*
*பதினாறாயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*உனை மறவோம் மாவீரா! நகுலா!*

தகவல்:
குடும்பத்தினர், நண்பர்கள்.




# SALES REP.

**A.C.L. CABLE LTD**

ஸ்தாபனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
ஆங்கிலம், பேச, எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
26.05.2004 புதன் காலை 9.00மணிக்கு முழுவிவரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**NEWTONE ELECTRICAL**

442, 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(32209) (26-13-24-38)


ஓ

**அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - **2004**

அம்பிகை அடியார்களே!

எமது தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் தாரண வருஷம் வைகாசித் திங்கள் 15ஆம் நாள் (28.05.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி 23ஆம் நாள் (05.06.2004) சனிக்கிழமை பெரும் பொங்கல் வைபவத்துடன் நிறைவடைகின்றது.

நாளாந்த உற்சவ நேர விவரம்:

பகல் உற்சவம்:
1. கிரியைகள் ஆரம்பம் - காலை 9.00 மணி
2. வசந்தமண்டபப் பூசை - காலை 11.00 மணி
3. திருவிழா நிறைவு - பிற்பகல் 1.30 மணி

இரவு உற்சவம்:
1. வசந்தமண்டபப் பூசை இரவு 8.00 மணி
2. திருவிழா நிறைவு இரவு 10.30 மணி

திருவிழா நாள்களில் நண்பகலில் அன்னதானம் நடைபெறும்.
வைகாசி 32ஆம் நாள் 14.06.2004 திங்கட்கிழமை மஹாசங்காபிஷேகம்.
பகல் அபிஷேகத்தைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானம் நடைபெறும்.
இரவு அம்பாள் எழுந்தருளி வீதி உலா வந்து அடியார்களுக்குத் திருவருள் பாலிப்பார்.
திருவிழா நிறைவு: இரவு 2.00 மணி

*அறிவித்தல்:* மஹோற்சவ காலங்களில் தற்காலிகக் கடைகள் அமைக்க விரும்புவோர் 26.05.2004 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன் வீதியில் சமுகந்தந்து அன்றையதினமே உற்சவ காலங்களுக்கான முழு வாடகைப் பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுத் தங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

ஆவரம்பிட்டி, அராலி. (சி-35165) (24-13-38) - **ஆலய பரிபாலன சபையினர்.**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய
கரவெட்டி மேற்கைச் சேர்ந்த
**திரு.**
**அந்தோனிப்பிள்ளை**
**அன்ரனஸ் யோகராசா**

அவர்கள் 21.05.2004 அன்று நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையையிட்டு அவரை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*
(32254) (24-13)

திருமதி புஸ்பராணி, தீபிகா, லக்ஷா, கிசோக் மற்றும்
திரு.செல்லப்பா, மலர் குடும்பத்தினர்,
தவயோகம் குடும்பத்தினர்.


# பதவி வெற்றிடம்

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

(Sales Representative)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep.) தேவைப்படுகிறார்.

கல்வித் தகைமை:
I) க.பொ.த. (சா/த) ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
II) க.பொ.த (உ/த) சித்தி.
சிங்களம் சரளமாகப் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது.

தகைமையுடையோர் தங்கள் சுயவிவரக்கோவையுடன் புதன்கிழமை (26.05.2004) காலை 10 மணிக்கு றூபா பன்முக வர்த்தக நிலையம், 104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

**றூபா பன்முக வர்த்தக நிலையம்,**
**104A, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(32533) (24-13)



# தூரிகை நுண்கலை வளாகம்

**மகளிர் பயிற்சி நெறிகள்**

உடையமைத்தல், பூவேலை
Hair Style, ஒப்பனைகள்,
கேக் ஐசிங், கைப்பணி,
Fabric Painting, கம்பளி நூல் பயிற்சி,
புகைப்படவியல், ஸ்கிறீன் பிரிண்டிங்

**ஆரம்பம்: 28-05-2004**

வெள்ளி a.m. 10.00

★ சான்றிதழுடன் கூடிய 2மாத கால பயிற்சியைவிட துரித 3வார பிரத்தியேக வகுப்புகளும் நடைபெறும்.
★ அனுமதிகள் ஆரம்பமாகிவிட்டன.

**செங்குந்தா வீதி, கல்வியங்காடு.** | **ம.ம.வி. வீதி, நெல்லியடி.**

(சி-35156) (26-13-24)

# விருது பெற்ற 'வீடு'...!

**சிறுகதை இலக்கியத் துறையில் தனக்கெனத் தனித்துவமான நடையினைக் கொண்டிருப்பவர் எழுத்தாளர் சி.கதிர்காமநாதன். இணுவிலில் பிறந்தவரும் தற்போது தொல்புரத்தில் வசிப்பவருமான இவருக்கு வயது 44. இதுவரை 60 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் "எனது ஊரிலும் தான்" என்ற குறுநாவலையும் எழுதியுள்ளார். இவர் அண்மையில் எழுதிய 'வீடு' சிறுகதைக்கு "கனக செந்தி கதா விருது" கிடைத்திருக்கிறது. 'கலைச்சுடர்' பகுதிக்கு எழுத்தாளர் கதிர்காமநாதன் வழங்கிய செவ்வி இவ்வாரம் விரிகிறது.**

*கேள்வி:* உங்களது படைப்புலக ஈடுபாடு, பிரவேசம் என்பன பற்றி...

*பதில்:* நான் சிறுவயதில் இருந்தே புத்தகங்கள், வாரப்பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கத்தை எனது தந்தையார் தொடக்கி வைத்துவிட்டார்.

அப்பொழுது தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் பேப்பர்கார கிருஷ்ணசாமி மூலம் தவறாது வீடு தேடி வந்துவிடும். அப்பொழுது சித்திரக் கதைகள் வாசிக்கும் ஆர்வம் என்னிடம் நிறைய இருந்தது.

அதுமட்டுமன்றி தென்னிந்திய நாவல்களில் கல்கி, சாண்டில்யன், ரா.சு.நல்லபெருமாள் போன்றோர் எழுதியவற்றை வாசிக்க முடிந்தது. பின்னர் ஈழத்து எழுத்தாளர் செங்கை ஆழியானின் நாவல்களை அதிகம் படித்தேன்.

காலப்போக்கில் எனது சகோதரன் சிதம்பரதிருச்செந்திநாதன் வீரகேசரியில் எழுதத் தொடங்கினார். அப்போது எனது கவனம் சிறுகதையின் பக்கம் திரும்பியது. பல சிறுகதைகளைப் பற்றி நானும் அண்ணனும் விமர்சனங்களைப் பரிமாறிக்கொண்டோம்.

சிறிது காலத்தின் பின் நான் எனது முதல் கதையினை எழுதி என் தந்தையிடம் காட்டிய பொழுது அவர் "நடை நன்றாக உள்ளது. முடிவு தான் அவசரமாக உள்ளது. மறுபடியும் எழுதிப் பார்... உன்னால் முடியும்" என்று ஊக்கம் தந்தார்.

எழுதினேன் 'ஈழநாடு' வாரமலரில் 'பலாப் பழம்' (1983) என்ற பெயரில் பிரசுரமானது.

*கேள்வி:* தொடர்ந்து உங்களின் எழுத்துக்களுக்கான களங்கள்...?


*பதில்:* ஏராளமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன எனக்குக் களமாக அமைந்தன. ஈழநாடு, முரசொலி, வீரகேசரி, தினகரன் சஞ்சீவி, ஈழநாதம், தினக்குரல், சுடர்ஒளி, வலம்புரி, நமது ஈழநாடு, உள்ளம், கலைமுகம், சரிநிகர், அமுது, தாயகம், வெளிச்சம், அம்பலம், மானச தீபம், சுந்தரன் போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இதுவரை 60 இற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளேன்.

*கேள்வி:* உங்களது சிறுகதைகளுக்கான கருக்கள் எவ்வாறு உங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.?

*பதில்:* கரு என்பது பலாத்காரமாகவோ வன்முறையாகவோ இட்டுக்காட்டப்படுவதாகவோ அல்லது கேட்ட செய்தியைத் திரும்பக் கூறுவது போலவோ அமைந்து விடுவது விரும்பத்தக்கதல்ல.

நாம் கலையென உள்வாங்கும் சம்பவம் நிஜமானது - கண்ணுக்குத் தெரிவது - உயிரானது. அதனை நாம சிறுகதை வடிவத்துக்குக் கொண்டு வரும்போது அழகியல் தன்மையைப் பெற்று விடுகிறது.

எனது கதைகளில் சிறுசிறு சம்பவங்கள் தான் கருக்களாக அமைகின்றன. சிறுகதை



வடிவம் மிளகு போன்று பெறுமதியானது. சொல்ல வேண்டியதை, இலகுவாக, யதார்த்தமாக சொல்லிமுடித்துவிட வேண்டும். இதில் தேவையற்ற விடயங்களைப் புகுத்தினால் அதன் வடிவம் மாறி பெறுமதி குறைந்து விடும். கதையின் முடிவில்தான் நான் எனது கற்பனையைப் பயன்படுத்திக் கொள்கிறேன். அதையும் கதையோடு யதார்த்தமாக புகுத்திக் கொண்டால் சிறந்த சிறுகதை ஒன்று உருவாகும்.

மனிதர்களைவிடப் பறவைகள், விலங்குகள என்பவற்றின் நடத்தைகளையும் கூர்ந்து கவனித்து, உள்வாங்கி எனது கதைகளில் உலாவ விட்டிருக்கின்றேன். கதையின் முடிவு கதை எழுதும்போது இயல்பாகவே வந்து விடுகின்றது.

*கேள்வி:* சமகால நிகழ்வுகளை கிண்டலாகச் சொல்லும் உவமைகள், நகைச்சுவை இழையோடும் நடை என்பவற்றை உங்கள் கதைகளில் காண முடிகிறது. இந்தத் திறனை எப்படி உள்வாங்கிக் கொண்டீர்கள்...?

*பதில்:* நகைச்சுவையும் கிண்டலும் நடைமுறை உவமைகளும் ஆரம்பகாலம் தொட்டு என் உள்மனதில் இருந்தது உண்மையே. அதனை 'சுந்தரன்' சஞ்சிகை வெளிக்கொணர்ந்தது. அச்சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் நான் எழுதிய 'டார்வினின் வாரிசுகள்' சிறுகதை முதலிடத்தைப் பெற்றது. அந்த உற்சாகத்தோடு தொடர்ந்து எழுதினேன்.

இக்காலகட்டத்தில் 'சஞ்சீவி'யிலும் 'சிரி கதைகள்' என்ற தலைப்போடு எனது நகைச்சுவைக் கதைகள் வெளிவந்தன. இதில் சஞ்சீவிப் பத்திரிகையின் உறுதுணை மறக்கமுடியாதது.

கிண்டல் பாணியிலான உவமைகள், நான எழுதும்போது இயல்பாகவே வருகின்றன.

*கேள்வி:-* விருது பெற்ற வீடு கதைக் கருவுக்கான உந்தல் பற்றி...?

*பதில்:-* இந்தக் கதைக்கான கரு எனது மகன் சிதம்பரபாணன் மூலமே கிடைத்தது. அவன் ஒரு நாள் ஆசிரியர் "நாளை வரும் போது வீடு செய்து கொண்டு வரவேண்டும்" என்று கூறியிருப்பதாக வந்து சொன்னார்கள். அத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அப்பா வாகிய என்னிடம் விழுந்தது.

பிஸ்கட் பெட்டி, கத்திரிக்கோல், வாணீஸ்பேப்பர், கம், ஈர்க்கு, சகிதம் பக்கத்தில் மகனோடு வீடு கட்டி முடிக்கும் போதுதான் இந்தக் கதைக்குக் கரு உருவானது.

கதை எழுதிய பிறகு மனதுக்குத் திருப்தியாக இருந்தது.

வீடு கட்டி முடித்தபின் மகனின் மன ஓட்டம், ஆனந்தம், இரவில் படுக்கும் போது பக்கத்திலேயே வைத்துக்கொண்டு படுத்தமை போன்றன எனக்கு இக்கதையை எழுத மேலும் தூண்டுதலாயிருந்தன.

*கேள்வி:-* விருது கிடைத்தமை தொடர்பான உங்கள் மன உணர்வினைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?

*பதில்:* நண்பர் ஒருவர் மூலமே விருது கிடைத்தது பற்றி அறிந்தேன், மலைப்பாயிருந்தது. எதிர்பாராத விருது; ஏனெனில், ஒரு போட்டிக்குக் கதை அனுப்பினால் முடிவு வரும் என்பது தெரியும். ஆனால், இந்த விருது பற்றி எனக்கு எதுவுமே தெரியாமலிருந்தது. மனதின் மூலையில் என்னில், என் படைப்பில் மிகுந்த நம்பிக்கை உண்டு. எதுவுமே நாம் தேடிப்போகாமல் தானாக வரவேண்டும். அவ்வகையில் எனக்கு இந்த விருது கிடைத்ததையிட்டு அடக்கமான சந்தோஷம்.

*கேள்வி:* இன்றைய ஈழத்துச் சிறுகதைகள் பலவும் ' மரபுடைப்பு', 'பின்ந வீனத்துவம்' எனும சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு வெவ்வேறு பரிசோதனை முயற்சிகளை செய்கின்றன. இந்நிலை ஆரோக்கியமான சிறுகதைச் சூழலை உருவாக்கும் என எண்ணுகிறீர்களா?

*பதில்:* கால ஓட்டத்தில் மாற்றங்கள் வந்து கொண்டுதானிருக்கும். இலக்கியங்களிலும் இதைத் தடுக்கமுடியாது. பல உத்திகளை சிறுகதை வடிவத்துக்குள் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாற்றங்களோடு பத்திரிகைகள், சிறு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இப்படியான மாற்றங்கள் தேவைதானா? ஆரோக்கியமானதா? இவை சாதிக்கப் போவது என்ன? போன்ற கேள்விகளுக்கு இது தான் நடக்கும் என்று உறுதியாகப் பதில் கூறிவிடமுடியாது.

இன்று சிறுகதையின் அளவு கூட சிறுத்துவிட்டது. வாசகர்கள் அவசரத்தன்மை கொண்டவர்களாக மாறிவிட்டனர். எமக்கு இப்போது தேவை வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதே. இலக்கியத்தில் மாற்றம் வருவது பெரிய விடயமல்ல. அதனை வாசிப்பவர்கள் வாசித்து ரசிக்கத் தூண்டுவதாகவும் படைப்பது எழுத்தாளனின் கடமை.

> ***...இப்போது எமக்குத் தேவை வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதே. இலக்கியத்தில் மாற்றம் வருவது பெரிய விடயமல்ல. எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் வாசகர்களை வாசிக்கத் தூண்டக் கூடியதாக குறிப்பிட்ட இலக்கியத்தைப் படைப்பது எழுத்தாளனின் கடமையாகும்...***

*கேள்வி:* அதிகமான சிறுகதைகளை எழுதியும் தொகுப்பாக வெளியிட நீங்கள் எண்ணவில்லையா? இப்போது வெளிவரும் அதிகமான தொகுப்புகள் பற்றி..?

*பதில்:* எனது சூழல், பொருளாதாரம் எனக்கு தொகுப்பு பற்றிய எண்ணத்தை தரவில்லை. இப்போது தொகுப்பு நூல் உருவாக்கத்தில் முயற்சிக்கின்றேன்.

இன்று அனேக தொகுப்புகள் வெளிவருகின்றன. இப்போது இலகுவாக யாரும் தொகுப்புகள் வெளியிட முடிகிறது. விற்பனை வசதிகள், பிரசுர வசதிகள் என்பன இவற்றுக்கு மிகவும் அவசியமாகின்றது. ஒவ்வொரு படைப்பாளியும் தனது படைப்புகளைத் தொகுப்பாக கொண்டு வருவது சந்தோஷமான விடயம். அவர்களின் தொகுப்புகளில் வலியன வாழும்.

*கேள்வி:* புதிதாக எழுத ஆரம்பிப்பவர்களுக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும் நீங்கள் சொல்ல விரும்புவது...?

*பதில்:* அதிக நூல்களை வாசியுங்கள், பல விடயங்களைக் கேட்டு அறியுங்கள். ஈழத்துச் சகோதர எழுத்தாளர்களின் நூல்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை நிறைய வாசியுங்கள். எழுதுங்கள். அதிக 'கருக்கள்' வரும்.

எதனை எழுதுவது என கஷ்டமாக இருக்கும். எழுதியவற்றைத் தெரிந்தவர்களிடம் வாசிக்கக் கொடுங்கள். அபிப்பிராயங்களை அறியுங்கள். திருத்தம் செய்யுங்கள்.

ஈழத்து ஜெயகாந்தன், ஈழத்து சுந்தரராமசாமி என அதிக எண்ணத்தில் மூழ்காமல் சொந்தமாக இலக்கியம் படையுங்கள். அவசரம் வேண்டாம். எழுத வேண்டும் என்ற எண்ணம் வரும்போது எழுதுங்கள். உங்களை யாரும் தடுக்கமுடியாது.

இப்போது அதிக சஞ்சிகைகள் வெளிவருகின்றன. பல இளம் எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். மூத்த எழுத்தாளர்கள் பலரும் சிறு சஞ்சிகைகள் மூலம் முன்னுக்கு வந்தவர்கள். எனவே, அதிகமாக எழுத வேண்டும் என்று ஆசைப்படாமல் நன்றாக எழுதி அனுப்புங்கள். இப்போது இளம் படைப்பாளிகளின் பிரசுரக்களம் பிரகாசமாகவே உள்ளது. ★

**சந்திப்பு: பிரமன்**

**கலைச்சுடர்**

**தயாரிப்பு: அற்புதன்**

---

# பரவசத்தை அள்ளித் தெளித்த பரத நாட்டிய அரங்கேற்றம்

**க**லைகள் மிகுந்து அருள்மலிந்து மிளிருகின்ற யாழ்ப்பாணத்தில் பரதக்கலை மரபு ரீதியாக வளர்ந்து வருகிறது. இதனது எடுத்துக் காட்டாக கடந்த 2ஆம் திகதி அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்ஷனனின் மாணவி செல்வி மயூரி குணநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

பண்பு நிறைந்த பரதப்பயிற்சி பெற்று, கரங்களில் சிறப்புறு முத்திரைகள் காட்டி, அரங்கு நிறைந்த கலையார்வலர்களின் உள்ளத்தில் கலையின்பம் பொங்கிட பாவரஸங்களை வரமெனப் பெற்றவர் போல தாளலயத்துடன் அழகுறு பரதநாட்டிய ஆற்றுகையை நிகழ்த்திக் காட்டினார்.

**தொகுப்பு: சுயர்சன்**

பரதமானது தமிழரது அழகியற் சிந்தனைகளும், கலையாக்கங்களும், சமூகப்படிமலர்ச்சி (Social Evolution) முதலியவற்றை அடியொற்றிய ஆக்கங்களாக அமைந்துள்ளன.

பரத ஆற்றுகையில் சூழலை விளக்குவதற்குரிய அடிப்படை விளக்குதலாக உடலசைவுகளே முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய நடன அம்சங்களை செல்வி கே.மயூரியினது அரங்கேற்றத்தில் காணமுடிந்தது.



இந்த அரங்கேற்றத்தில் சிறப்புறு உருப்படிகளில் தொடக்க உருப்படியாக தவில் நாதஸ்வரத்தில் மல்லாரி இசைக்க, மயூரி விழிகள் பல்வேறு கோணங்களில் சுழல கால்களும், கைகளும் சமபங்கில் அசைய நடம் புரிந்தார். இதை அவதானித்த பேச்சாளர்கள் அனைவருமே வியந்து பாராட்டினர்.

இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற நல்லை குரு மஹா சந்நிதான முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

இடையிடையே ஆடலும், விருந்தினர்களுடைய உரையுமாக நிகழ்வு நகர்ந்தது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய யாழ். பல்கலைக்கழக தமிழத்துறைத் தலைவர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில் கூறியதாவது:-

மல்லாரியானது, இறைவனும் - இறைவியும் உலாவரும் போது, அந்த மல்லாரி இசையில் அவர்களது கம்பீரத்தைக் கண்டு களித்து, துதித்து நிற்பதைக் குறிக்கும்.

தவில் - நாதஸ்வரத்தில் இசைக்கப்படுகின்ற மல்லாரி இசைக்கு ஆடுவது மிகக் கடினம். ஆனால், மயூரி மிகச் சுலபமாக மல்லாரி இசைக்கு ஆடல் புரிந்தார்.

அந்தவகையில், மயூரியும் அவரைப் பயிற்றுவித்த ஸ்ரீமதி ஆனந்தஜோதி தர்சனனுக்கும் எமது பாராட்டுக்கள் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பிரபல நடன ஆசிரியரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளருமான திருமதி சாந்தினி - சிவனேசன் வாழ்த்துரை வழங்கினார்.


பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வியியற் பேராசிரியர் சபா.ஜெயராசா தனது உரையில், பரத நாட்டியக் கலையானது தமிழர்களுடைய அடையாளத்தை உலகெங்கும் பூரிப்பி நிற்கும் கலையாகும். தமிழரது இலக்கியம், வழிபாட்டுமுறை, ஆடை அணிகலன்கள் பண்பாடு என்பவற்றை உள்நாட்டில் மட்டுமல்ல அகில உலகத்துக்கும் எடுத்துக் காட்டுகின்ற உன்னத கலைவடிவமாக பரதக் கலை விளங்குகிறது.

பரதக் கலையானது எங்களது பாரம்பரிய நாட்டார் பாடல்களில் இருந்து முகிழ்ந்தெழுந்து - செம்மைபெற்று எங்களுடைய உயர்ந்த இலக்கிய வடிவங்களை உள்ளடக்கி ஒரு நிறைவு கொண்ட கலையாக மிளிர்கின்றது.

வேற்றுமொழி பேசுவோர், வேறு பண்பாட்டை உடையவர்கள் எல்லோரும் பரதக்கலையை நேசித்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார். ▲

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

உ
முருகன் துணை



# அருள்மிகு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மஹோற்சவகால தெய்வீகப் பேருரைகள்

காலம்:
24.05.2004 தொடக்கம் 02.06.2004 வரை தினமும்
மாலை 6.00 - 7.30 மணிவரை (பழைய நேரம்)

தலைவர்:
திரு. ஆ.சிவநாதன் அவர்கள்
(ஆசிரியர், நெல்லியடி ம.ம. வித்தியாலயம்)

நீண்டகால இடைவெளியின் பின்

"கம்பவாரிதி" **இ.ஜெயராஜ்** அவர்களின்



## பெரியபுராணம் தொடர் பேருரைகள்

### கம்பவாரிதியின் உரைப்பொருள்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாம் நாள் | 24.05.2004 | திங்கள் | கொடியேற்றத் திருவிழா | "வானொலி" |
| 2ஆம் நாள் | 25.05.2004 | செவ்வாய் | 2ஆம் திருவிழா | "தொலைக்காட்சி" |
| 3ஆம் நாள் | 26.05.2004 | புதன் | 3ஆம் திருவிழா | "தொடர்நாடகம்" |
| 4ஆம் நாள் | 27.05.2004 | வியாழன் | 4ஆம் திருவிழா | "வீதி விபத்து" |
| 5ஆம் நாள் | 28.05.2004 | வெள்ளி | 5ஆம் திருவிழா | "மதமாற்றம்" |
| 6ஆம் நாள் | 29.05.2004 | சனி | 6ஆம் திருவிழா | "அழுதபிள்ளை" |
| 7ஆம் நாள் | 30.05.2004 | ஞாயிறு | 7ஆம் திருவிழா | "ஏழையின் விருந்து" |
| 8ஆம் நாள் | 31.05.2004 | திங்கள் | வேட்டை, சப்பரம் | "என்னைத் தொடாதே" |
| 9ஆம் நாள் | 01.06.2004 | செவ்வாய் | தேர்த்திருவிழா | "அப்பாவின் அம்மா" |
| 10ஆம் நாள் | 02.06.2004 | புதன் | தீர்த்தத் திருவிழா | "மனித அடிமை" |

(சி-35108) (24-16-19)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- ஆலய பரிபாலன சபையினர்.

விளம்பர அனுசரணை: சிவசக்தி இரும்பகம்

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் "றிக்கோ ஹோட்டல்" உரிமையாளருமாகிய

**முத்துச்சாமி பத்மநாதன்** அவர்களின்

மறைவைக் கேள்வியுற்று துயரமடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி-35140) (24-16-19-24)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வித்தாய் 28 - 05 - 1966

விதையாய் 12 - 04 - 2004

**லெப். கேணல் நீலன்**

[மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறைத் துணைத் தளபதி]

**சீனித்தம்பி சோமநாதன்** (ஆரையம்பதி - 3, மட்டு.)

மட்டு நகர் பெற்றெடுத்த மறத் தமிழன் நீ
மக்கள் மனம் தொட்டுவிட்ட மானிடன் – நீ
மண்ணில் வரும் அமைதி பெற பாடுபட்டாய் – அது
மலரும் வேளை மண்ணை விட்டு நீ மறைந்தாய்.

அன்னாரின் நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 26. 05. 2004 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திக்காய் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

(32206)(34-16-19-24)

---

# இலங்கை மின்சார சபை
## யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப் படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 29.05.2004 காலை 9.00-பி.ப. 5.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி. |
| 05.06.2004 காலை 9.00-பி.ப. 5.00 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 12.06.2004 காலை 9.00 - பி.ப. 5.00 | திருநெல்வேலி, தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணப்பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மருதனார்மடம், மானிப்பாய், உடுவில், சங்குவேலி. |
| 19.06.2004 காலை 9.00 - பி.ப. 5.00 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, வடமராட்சி. |
| 26.06.2004 காலை 9.00 - பி.ப. 5.00 | வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், இளவாலை, சங்கானை, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை. |
| 03.07.2004 காலை 9.00-பி.ப. 5.00 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி. |

*இதனால், மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.*

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(சி-35086)(34-16-19-24)

## அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்

இன்று (24.05.2004) திங்கட்கிழமை
உபநயன பிரம்மோபதேசம் பெறும்
குணநாத சர்மா - கமலபூபதி
தம்பதிகளின் புதல்வர்களான
செல்வன் கஜேந்திர சர்மாவையும்
செல்வன் ஹரிகர சர்மாவையும்
அல்லாரை அறுகம்புலம் பிள்ளையார்
அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

க.அம்பிகைபாகன்
குடும்பத்தினர்.

அல்லாரை. (சி-35094) (24-19-13-26)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

செம்பியன்பற்று,மே24

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாய்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

வளர்ப்பு நாய்கள் பதிவுசெய்யப்பட்டு அவற்றிற்கு இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவை நாய்களின் கழுத்தில் தொங்கவிடப்பட்டுள்ளன.

கழுத்தில் இலக்கத்தகடுகள் இல்லாத நாய்கள் எல்லாம் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படுகிறது.

கடந்த 2 நாள்களில் மட்டும் 35 கட்டாக்காலி நாய்கள் இவ்வாறு அழிக்கப்பட்டிருப்பதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (-4-36)

## வெலிக்கண்டல் பாலம் சேதம்; போக்குவரத்தில் பெரும் சிரமம்!


கிளிநொச்சி,மே24

கிளிநொச்சி - கண்டாவளை வெலிக்கண்டல்பாலம் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவிற்கு பலத்த சேதம் அடைந்துள்ளது.

முல்லைத்தீவு செல்லும் வீதியில் அமைந்துள்ள இப்பாலத்தினூடாக லொறிகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பஸ்களில் இருந்து பயணிகள் இறங்கி ஏற வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. (ஐ-12)

Swan
சுவான் டீசல் என்ஜின்

- நம்பிக்கையில் தலைசிறந்தது
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு



அதிஉயர் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு

Access Gi

ஏக முகவர்கள்.
சென்ட். அந்தனீஸ் ஹாா்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை: 2324261-5, 2337283-5 ,பெக்ஸ்: 2446554

IBMS
புதிய நிர்வாகத்தின் கீழ் நவீன தொழில் நுட்ப அறிமுகங்களுடன்

COMPUTER COURSES

New Batches Start on 12.06.2004 & 14.06.2004 at 10.00 a.m.

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN INTERNET TECHNOLOGY
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN DESK TOP PUBLISHING

Certificate Courses

Java, Visual Basic, C++, Oracle, MS Word, MS Excel, MS Access, Photoshop, Page Maker, Corel DRAW

- Registered with Tertiary and Vocational Education Commission, Sri Lanka.
- Registered to Association of Computer Training Organisations, Sri Lanka.

Institute of Business Management Studies

Head Office: # 410, K.K.S. Road, Jaffna. T.P : 021 222 3165

Branches: Nelliady, Karaveddy, Chavakachcheri

## 4 ஆம் வருட இதய அஞ்சலி

தோற்றம் 1957 - 11 - 06



மறைவு 2000 - 05 - 24

செல்வி சசிகலா சுப்பிரமணியம்

(முன்னாள் சிறாப்பர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)

அன்புள்ளம் கொண்ட மணிவிளக்கே!
நினைவகலா நெஞ்சங்களின்
இதயம் கனிந்த அஞ்சலிகள் உரித்தாகுக!

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய். (32506)(34-19-16-26)

- குடும்பத்தினர்.

Sainas Travels & Tours

(Labour Licence No - 10004)

Tel.:0115-365050,0115-376907
Fax.:0115-376908,
Hot Line:0777-311880

190, George RD, Silva Mawatta.
Colombo -13,
Sri Lanka.

உடனடி டோஹா வேலை வாய்ப்புக்கள்

| தேவைப்படும் தொகையினர் | வேலைவிபரங்கள் | வயது | சம்பளம் | ரூபா |
|---|---|---|---|---|
| 25 | டீ போய் | 20 - 30 | 500 QR | 14000 |
| 15 | டீசல் மெக்கானிக் | | 1100 QR | 30800 |
| 18 | பெட்ரோல் மெக்கானிக் | | 700 QR | 19600 |
| 65 | மேசன் | | 700 QR | 19600 |
| 15 | ஸ்டீல் பிட்டர் | | 800 QR | 22400 |
| 65 | ஷடரிங் காபென்டர்ஸ் தச்சுவேலை | | 750 QR | 21000 |
| 25 | இலக்ரீசியன் (கட்டிடம்) | | 700 - 800 QR | 19000 - 22400 |
| 15 | வீட்டு சாரதி (Driver) | | 600 QR | 16 800 |
| 15 | கணக்காளர்கள் (Gulf Experience) | | 1200 - 1500 QR | 33600 - 42000 |
| | பொது வேலையாட்கள் (கட்டுமான வேலை) | | 500 QR | 14000 |
| 10 | சிவில் இஞ்சினியர் | | 2500 QR | 70000 |
| 15 | கட்டிட போமன் | | 1500 QR | 42000 |
| 10 | painters | | 550 QR | 15400 |
| 15 | சாதாரண வாகன சாரதி (Light Vehicle Driver) | | 600 QR | 16800 |
| 15 | டிங்கர் | | 700 QR | 19600 |
| 5 | மெசின் டெக்னீசியன் | | 750 QR | 21000 |
| 5 | தொழில் பாமசி (Industrial Pharmacy) | | 1200 QR | 33600 |
| 3 | தரக்கட்டுப்பாட்டாளர் Quality Controller | | | |
| | Lab Technician | | 1000 QR | 28000 |
| 3 | ஆய்வுகூட டெக்னீசியன் | | 800 - 1000 QR | 22400 - 28000 |
| 3 | பாதுகாவலர்/வரவேற்பாளர் | | 400 QR | 11200 |
| 1 | செயலாளர் | | 600 - 800 QR | 16800 - 22400 |
| 1 | கணனி பொறியியலாளர் | | 800 - 1000 QR | 22400 - 28000 |
| 5 | வைத்திய நிபுணர்கள் General Acupuncture Othurpatic | | சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும் | |
| 10 | குஷன் மேக்கர் (Van upostery) | | 700 - 800 QR | 19600 - 22400 |
| 10 | குஷன் மேக்கர் (chair) | | 700 - 800 QR | 19600 - 22400 |

ஈராக் - உடனடி வேலை வாய்ப்பு (ஆண்களுக்கு)
(Jordan, Doha, K.S.A, Dubai- Kuwait வீட்டுப் பணிப் பெண்கள் – உடனடிப் பயணம்.)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
## 82ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினம்

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, சித்திரம் மற்றும் வினாவிடைப் போட்டிகள்

மேற்படி போட்டிகளில் 10-11, 12-13 தர மாணவர்கள் கலந்துகொள்ளலாம். போட்டிகள் யாவும் தமிழ்மொழியிலே நடைபெறும்.

போட்டிகளின் விவரம்

| விடயம் | தரம் |
|---|---|
| 1. பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி சித்திரப் போட்டி | 10–11 |
| 2. பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி சித்திரப் போட்டி | 12–13 |
| 3. வினாவிடைப் போட்டி (4பேர் கொண்ட குழு பங்குபற்றலாம்). | |

போட்டியாளர்களின் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தி 09-06-2004இற்கு முன்பாக செயலாளர், கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதி 2ஆம் மாடி, இல.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலதிக விவரங்களை கூட்டுறவுச் சபையில் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

போட்டிகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 10–11 | கட்டுரை | 11.06.2004 | காலை 10.00–11.00 வரை |
| ஆண்டு 12–13 | கட்டுரை | 11.06.2004 | காலை 10.00–11.30 வரை |
| ஆண்டு 10–11 | சித்திரம் | 11.06.2004 | காலை 10.00–12.00 வரை |
| ஆண்டு 12–13 | சித்திரம் | 11.06.2004 | காலை 10.00–12.00 வரை |
| வினாவிடைப்போட்டி | | 12.06.2004 | காலை 10.00 முதல் |
| ஆண்டு 10–11 | பேச்சு | 12.06.2004 | காலை 10.00 மணி |
| ஆண்டு 12–13 | பேச்சு | 12.06.2004 | காலை 10.00 மணி |

- செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி-35130)(26-16-19)

உ

மங்களகரமான

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் வைகாசித் திங்கள் 11 ஆம் நாள் இன்று (24.05.2004) திங்கட்கிழமை முற்பகல் 11.13 மணிமுதல் 1.01 மணிவரையில் வரும் சிங்க லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

இல.19, நவீன சந்தை உட்புறம் சாவகச்சேரியில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற நிலையமான

## சாரதாஸ் ரெக்ஸ்

## ☆ SHARATHAAS TEX ☆

என்னும் புடைவை வியாபார நிலையத்தை திறப்புவிழாச் செய்ய இறைவன் திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வந்து கலந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.கந்தசாமி நிரஞ்சன்

- உரிமையாளர்.

19, நவீன சந்தை (உட்புறம்),

சாவகச்சேரி. (32512) (34-13-19-24)


# வலயக் கல்வி அலுவலகம்

## வடமராட்சி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 10.06.2004 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி க.பொ.த. (உ/த) விஞ்ஞான கூடம் 90'x25' கீழ்த்தளம் (மிகுதி வேலை) | ரூபா 500.00 | ரூபா 10,000.00 |
| யா/அல்வாய் வடக்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை 60'x25' வகுப்பறை அமைத்தல் | ரூபா 500.00 | ரூபா 10,000.00 |
| யா/வட. மத்திய பெண்கள் கல்லூரி 40'x25' இரு மாடிக் கட்டடம் மிகுதிவேலை 70'x25' இரு மாடிக் கட்டடம் திருத்தவேலை | ரூபா 500.00 | ரூபா 10,000.00 |

1. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 9உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்.
2. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்படாத கேள்வித் தொகை என் பன தனித்தனியாகக் குறிப்பிடப்படவேண்டும்.
3. மேற்படி வேலைகளுக்கமைவாகக் கேள்விப்பத்திரத்தைத் தங்களுக்கு வசதியான வங்கி யிலிட்டு *வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி* என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay order) வடமராட்சி வலயப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2004.05.31ஆம் திகதி தொடக்கம் 2004.06.04ஆம் திகதிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும், இணைப்பிரதியும் தனித்தனிக் கடித உறைகளில் இடப்பட்டு, உறைகளின் இடப்பக்க மேற் பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப் பட்ட கேள்விப் பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப் பந்தகாரரின் முத்திரையிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலு வலகம், வடமராட்சி, புலோலி என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 2004.06.10 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. கேள்விச் சபையால் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தமொன்றைச் செய்து, 4 மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

வே.தி.செல்வரத்தினம்,
கேள்விச் சபைத் தலைவர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

பாடசாலைகள் வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

(சி-35124) (24-13-19)


ஓட்டோ உரிமையாளர், சாரதிகளுக்கான

## கலந்துரையாடல்



சுன்னாகம் கிளைச் சங்கத்திற்குட்பட்ட (16-C-H) அளவெட்டி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து ஓட்டோ உரிமையாளர், சாரதிகளுக்கான கலந்துரையாடல்

நாளை (25-05-2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அளவெட்டி மகாசபைக் கட்டடத்தில் (அளவெட்டி ப.நோ.கூ.சங்க அருகில்) நடைபெறவுள்ளதால் அப்பகுதி ஓட்டோ உரிமையாளர், சாரதிகள் தவறாது கலந்துகொள்ளவும்.

ஓட்டோ சங்கம்,
தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

(சி-35147) (26-13-19-24)



## சண் மல்ரி ட்றேட் சென்ரர்

## Shan Multy Trade Centre

ஐந்து ஆண்டு நிறைவையொட்டி

**மாபெரும் மலிவு விற்பனை**

22.05.2004 → 29.05.2004 வரை

**10% கழிவு வழங்கப்படும்.**

**Sony, National TV** வகைகள் (19", 20", 21", 25", 29", 34") Deck, Setup Radio, Amplifier [(Pioneer, Marantz, Kenwood) 200w-700w] Sony FH Radio என்பன விற்பனைக்கு உண்டு.

உத்தரவாதத்துடன் வழங்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சண் மல்ரி ட்றேட் சென்ரா**

T.P.NO: 2227442. 150, K.K.S. Road, Jaffna. (New No.232)

(32210)(34-24-13-19)



மாவை-கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயில்

## வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம் - 25.05.2004 செவ்வாய்க்கிழமை
சப்பரம் - 01.06.2004 செவ்வாய்க்கிழமை
தேர்த்திருவிழா - 02.06.2004 புதன்கிழமை
தீர்த்தோற்சவம் - 03.06.2004 வியாழக்கிழமை

☞ காலை 8.00 மணிக்கு பகல் திருவிழாவுக்கும், பிற்பகல் 2.00 மணிக்கு மாலைத் திருவிழாவுக்கும் அடியார்கள் சென்று வர பஸ் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் அன்னதானமும் நடைபெறும்.
அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

- அறங்காவலர்.

(சி-35136)(34-24-19-13)


## 31 ஆம் நாள்

## நினைவு மலர்த் தூவல்



அமரர் இளையதம்பி சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய நிலஅளவைத் திணைக்கள மேற்பார்வையாளர்)

மண்ணில் 09-09-1933 விண்ணில் 24-04-2004

ஊருக்கு ஒளியீந்த உத்தமரே எம்மப்பா!
உறவுக்குக் கைகொடுத்த உயர்வுதரு மேலவரே!
பாருள்ள வரையுங்கள் பசுமைநினை வுயர்ந்திருக்கும்
பணிந்து மலர்தூவிப் பதம்துதித்தோம்! அமைதிகொள்க!

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தற்காலிக முகவரி:
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில.

(32101)(34-24-13-16)

# தமிழர்களது ஒற்றுமையும் பலமுமே அரசுகளை பேச்சுக்கு வர வைத்தன!

## வன்னி எம்.பி. கனகரத்தினம் கூறுகிறார்

தமிழ் மக்களின் ஒற்றுமையும் பலமும் தான் சிறிலங்கா அரச தலைமைகளைப் பேச்சு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு வழிகோலியுள்ளது.

- இவ்வாறு தமிழ்க்கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு பலநோக்குக் கூட்டறவுச்சங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அரிசி ஆலையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னிப் பிரதேசம் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. போர்ச் சூழல் அகன்றபோதும் மக்களின் வாழ்வில் பொருளாதார மேம்பாடுகள் இன்று ஏற்படவில்லை.

மக்கள் விவசாய முயற்சிகளை முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் வீதிகள் முக்கியமானவை. ஆனால், வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன.

எமது மண்ணில் போரினால் அழிவடைந்த சகல கட்டுமானங்களும் மக்களின் பலத்தினால் புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

இன்று இப்பிரதேசத்தில் அரிசி ஆலை ஒன்று செயற்படத் தொடங்கியுள்ளது. இது இப்பிரதேச மக்களுக்கு நல்ல வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

போரினால் சீரழிந்த இப்பகுதிகளில் சமாதான முயற்சிகள் மூலம் நல்ல முடிவுகள் எட்டப்படும்போது அபிவிருத்திப்பணிகள் விரைவாக இடம்பெற வழிவகுக்கும் - என்றார். (ஐ-12)

### மண்டைதீவு 'தூயஒளி' படகில்

# படுகொலையுண்ட மீனவர்களின் நினைவுத்தூபி மீண்டும் நிர்மாணம்

குருநகர்,மே24

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மண்டைதீவுக் கடற்பரப்பில் 'தூய ஒளி' படகின் மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ரோந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்தமாக குருநகர் சனசமூக நிலைய முன்றிலில் நிறுவப்பட்டு, இராணுவ நடவடிக்கையின் போது சேதமாக்கப்பட்ட நினைவுத்தூபி அங்கு மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

16 அடி உயரம் வரை அமைக்கப்பட்டு வரும் இந்த நினைவுத் தூபியை நிர்மாணிக்கும் வேலையைக் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

1995 இல் நடைபெற்ற அரசு - புலிகள் யுத்தம் காரணமாக படையினரால் சேதமாக்கப்பட்ட பழைய நினைவுத்தூபி அவ்விடத்தில் நினைவுச் சின்னமாகப் பேணப்படும் என கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தலைவர் அ.டெனிஸ்ராஜா தெரிவித்தார்.

பழைய தூபிக்கு அருகில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்படுகின்றது. (4-51)

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

குருநகர்,மே.24

யாழ் மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலக மேலதிகப் பிரதிப் பணிப்பாளர் (நிதி) க.தனஞ்சிதராஜன் தலைமையில் நடைபெறவுள்ள அந்நிகழ்வில் யாழ். பிரதி மாகாண சுகாதாரச்சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவார். (4-51)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வழமைநிலை திரும்புகின்றது

முல்லைத்தீவு,மே24

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசம் மீண்டும் வழமைநிலைக்குத் திரும்பிவருகின்றது.

1998ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் 'ரிவிபல' படை நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தினை ஸ்ரீலங்காப் படையினர் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தனர். இதனால் இப்பிரதேசத்தில் இருந்து மூவாயிரம் வரையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வன்னியின் பல்வேறு பகுதிகளில் வசித்து வந்தன.

விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள 03 நடவடிக்கையின் மூலம் இப்பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுக்கப்பட்டது. இங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன. ஒட்டுசுட்டான் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது எட்டுக் கிளைகளைச் செயற்பட வைத்துள்ளது. மக்களுக்கென அத்தியாவசியமான அரிசி ஆலை ஒன்றினையும் திறந்துதனது சேவையினை விரிவுபடுத்தியுள்ளது. ஒட்டுசுட்டான் மீண்டும் அதன் பழைய நிலைக்குத் திரும்பி வருகின்றது. (ஐ-12)

# வானதி வெளியீட்டகத்தின் 'புதிய கதைகள்' நூல்

யாழ்ப்பாணம்,மே24

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் 'புதிய கதைகள்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மலைமகளின் ஆக்கத்தில் உருவாக்கப்பட்ட இந்த நூலின் வெளியீட்டு விழாவுக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய ஆசிரியை திருமதி பத்மா ஜெயச்சந்திரன் தலைமைவகிப்பார்.

வெளியீட்டு உரையை கப்டன் வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த திருமதி தமிழவளும் ஆய்வுரைகளை எழுத்தாளர் சாந்தன், வலிகாமம் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவர், தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுபபாளர் புதுவை இரத்தினதுரை சிறப்புரையாற்றுவார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நூலை வெளியிட்டுவைப்பார். (ஐ-5)



யாழ். நகர்ப் பகுதியில் அண்மைய நாள்களாக அன்னாசிப்பழ வியாபாரம் சூடு பிடித்துள்ளது. தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட அன்னாசிப்பழங்கள் யாழ். பஸ்நிலையத்துக்கு அருகில் வீதியோரத்தில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: தீபன்)*

# குடும்பப் பெண்ணைக் காணவில்லை; மனித உரிமைக்குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம்,மே24

குடும்பப்பெண் ஒருவரைக்காணவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பட்டின சபை வீதி, சங்கானையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே காணாமற்போயுள்ளார் என்று அவரது தந்தை முறையிட்டுள்ளார்.

பிரஸ்தாப பெண் இம்மாதம் 11ஆம் திகதி காலை யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றார் எனவும் பின்னர் அவர் வீடு திரும்பவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்பான விவரங்கள் தெரிந்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை அதிகாரி ரி.மொறின் கேட்டுள்ளார். (ஐ-7)

### மக்கள் மீளக்குடியமர்ந்தபோதும்

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடு நடப்பதில்லை

முல்லைத்தீவு,மே24

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய வழிபாட்டுத் தலமான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பூஜைகள் ஒழுங்காக இடம்பெறாது ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டு இருப்பதினால் வழிபாட்டுக்கென செல்லும் அடியார்கள் ஏமாற்றத்துடன் விடுதிரும்பும்நிலை காணப்படுகின்றது.

1998ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் 'ரிவிபல' படைநடவடிக்கையின் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தினை படையினர் கைப்பற்றினர்.

இந்தநிலையில் இப்பகுதியில் வசித்து வந்த மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்தனர். மக்கள் ஒட்டுசுட்டான் பகுதியை விட்டு வெளியேறிய நிலையில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் பூஜைகள் எதுவுமின்றி இருள் சூழ்ந்து கிடந்தது.

1999ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் 'ஓயாத அலை - 03' நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் பிரதேசம் மீண்டும் விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப் பட்டதைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் தான்தோன்றிஸ்வரர் ஆலய நிர்வாக அமைப்புக்கள் இடம்பெயர்வுடன் சீர்குலைந்து இதுவரை ஒழுங்குபடுத்தல்கள் இடம்பெறவில்லை என்று கூறப்படுகின்றது.

ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் வேளைகளில் ஆலயக்கதவுகள் பூட்டப்பட்டு பூஜைகள் இடம்பெறாமல் இருப்பது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-12)

### நெற்செய்கையாளர் விவரம் பதிவு

சாவகச்சேரி,மே24

தென்மராட்சி தெற்குப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் உள்ள தமது விவசாய நிலங்களில் நெற்செய்கையில் ஈடுபடவிரும்புவோர் தமது விவரங்களை கைதடியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் பெருமபாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேநதிராவிடம் சமர்ப்பிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-31)

### பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவு

குருநகர்,மே24

குருநகர் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான மீன்பிடித் தொழில் நுட்பப்பயிற்சி நெறியில் பங்குபற்றிய பயிற்சியாளர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு இன்று 24ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

உரிய பயிற்சியாளர்கள் இன்று காலை 9 மணி தொடக்கம் அலுவலகத்திற்கு வருகை தந்து தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (4-5)

# சுகாதாரப் பணிமனையிலிருந்து 12 அலுவலர்கள் இடமாற்றம்

குருநகர்,மே24

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு செயலரின் இடமாற்றக் கட்டளையின்படி யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கடமை புரியும் இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் 12 பேர் யாழ்ப்பாணத்தில் உள்ள வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றத்துக்கான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் பெற்றவர்களின் பெயர்களும் அவர்கள் இடமாற்றம் பெற்றுள்ள புதிய திணைக்களங்களும் வருமாறு:-

அன்பரசி பிரதீபன், குணசிங்கம் பிரதீபன், ராஜகோபால் ரஜனி, ஆறுமுகம் நர்மதா (யாழ்.கல்வி வலயம்), அற்புதராணி கந்தையா, புண்ணியமூர்த்தி தேவகரன், சிவகுரு தவமோகன் (யாழ். மாநகரசபை), வசந்தி சந்திரபாலன் (வலி.மேற்கு பிரதேச சபை), நடராசா பத்மாகரன் (வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை), குணசிங்கம் அருள்நிதி (பருத்தித்துறை தளவைத்தியசாலை) கனகசபை வதனாம்பிகை (யாழ். நிறைவேற்று எந்திரி அலுவலகம்), ஜரின் பற்றிமா வின்சன்ட் (யாழ். மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம்). (ஐ-4-51)

# உலக உணவுத் திட்ட பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே24

ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் பற்றிய ஒருநாள் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆசிவகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் உலக உணவுத் திட்ட வவுனியா உப அலுவலகத் தலைவர் ம.்.புப் உல் அலாம், உலக உணவுத்திட்ட கிளிநொச்சி மாவட்டக்கள இணைப்பாளர் ரியன் அண்டர்சன் ஆகியோர் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

உலக உணவுத் திட்டத்தின் புதிய நடைமுறைகள் பற்றிக் கொழும்பு உலக உணவுத் திட்டத்தின் நிகழ்ச்சி அலுவலர் எம்.அஸ்மியும், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயற்பாடு பற்றி திட்ட இணைப்பாளர் டி.எச்.ஜே.சேனாதிராசாவும், புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சில் உலக உணவுத் திட்டத்தில் பங்குபற்றிய உலக உணவுத் திட்டக் கண்காணிப்பாளர் முஸ்தபா நிஹமத்தும, வேலைத்தரம், வேலைஅளவுகள் மற்றும் உணவுச் சட்டங்கள் என்பவை பற்றி உலக உணவுத் திட்ட தொழில் நுட்ப அலுவலர் எஸ்புண்ணியசீலனும் கருத்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் யாழ். செயலக உயர் அதிகாரிகளும் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-4-5)

### மாமுனை, குடாரப்பு பகுதிகளில்

# 'கியூமெடிக்கா' மருத்துவ சேவையை தொடர்ந்து வழங்கக் கோரிக்கை

குருநகர்,மே24

மாமுனை, குடாரப்புப் பகுதிகளில 'கியூமெடிக்கா' மருத்துவப் பிரிவினர் தற்போது நடத்தி வரும் நடமாடும் மருத்துவசேவையைத் தொடர்ந்து நடத்துமாறு மாமுனைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி மருத்துவ பிரிவினருக்கு சங்கம் மகஜர் ஒன்றினையும் அனுப்பிவைத்துள்ளது.

இப்பகுதிகளில் கடந்த ஆறுமாதங்களாக மேற்கொண்ட நடமாடும் மருத்துவசேவையை இம்மாதம் 31ஆம் திகதியுடன் இடைநிறுத்தப் போவதாக 'கியூமெடிக்கா' மருத்துவப்பிரிவினா யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்கள்.

இவ்வறிவித்தலைத் தொடர்ந்தே மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 'கியூமெடிக்கா' மருத்துவப் பிரிவினருக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளது.

மருத்துவ வசதிகள் அற்ற இப்பகுதியில் தொடர்ந்தும் இச்சேவையை வழங்குமாறும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-51)

# குயின் பியூட்டி சென்ரர்

## இன்று திறப்பு விழா – 24.05.2004

இடம்: குருசு மதவடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை

நேரம்: இன்று (24-05-2004) திங்கட்கிழமை 10.32 மணிக்கு

★ **Facial, Threading, Waxing**
★ **Hair Styles Bridal Make-up**
★ **Maricure & Pedicure**
★ **Wedding, Birthday Cakes**

இவை அனைத்தையும் உங்களுக்கு ஏற்ற விதத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மங்கையர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

இன்று (Facial) செய்பவர்களுக்கு கட்டணத்தில் விசேட கழிவு வழங்கப்படும். நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

மேலதிக விவரங்களுக்கு இன்றே நாடுங்கள்:
திருமதி சிவராஜா பிறேமலதா
குருசு மதவடி,
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
☎ 077 6367205, 077 6158967.

(40-13-16-26) (32256)


# ஆலயச் சூழலில் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன

சாவகச்சேரி,மே24

சாவகச்சேரி சங்கத்தானை கிராக்கச்சி அம்பாள் ஆலயச் சூழலில் உள்ள காணிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்களை மீட்கும் பணியில் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இப்பகுதியில் பெருமளவு மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள வெற்றுக்காணிகளில் தேங்காய் பிடுங்கச் சென்ற இருவர் மிதிவெடியில் அகப்பட்டு கால்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-4-31)

அமரத்துவம் அடைந்துவிட்ட

## S.A.E. இரட்ணராஜா

அவர்களின் இறுதி அஞ்சலிகள் பற்றிய அறிவித்தல்



புனித அந்தோனியார் கல்விச் சமூகம் தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தும்முகமாக அன்னாரின் புகழுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (24.05.2004இல்) பி.ப 2.00 மணிக்கு சுருவில் வீதி ஊடாக எடுத்துச்செல்லப்பட்டு புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதன்பின்பு புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு பி.ப. 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ.புவனேஸ்வரி அம்மா
(மனைவி)

(32255)(40-14-26)


# PERX Computer Hard Ware Accessaries

வடக்கு கிழக்கின் ஏக விநியோகஸ்தர்கள்
**NORTH EAST TECHNOLOGIES (NET)**

**Perx**™
PERFORMANCE WITH EXCELLENCE
**NEW GENERATION COMPUTER PRODUCTS**



Perx Monitors, Perx Casing,
Perx Branded Key Board,
Optical Mouse and 3D Speakers,
Perx UPS and More

இன்றிலிருந்து பொருள்களை எமது விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம். மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் யாழ். மாவட்ட உபமுகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

P-IV - 2.4 Ghz, 128 DDR Ram, 40GB HDD,
Perx Tower Casing,15"Advance Monitor,
Perx Branded Key Board, Mouse and Perx
Speakers with Perx UPS Free.
Rs.74,900/=

புத்தம் புதியதும் மீளமைக்கப்பட்ட கணனிகளும்,
கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனை,
திருத்த வேலைகள் UnLocking வசதிகள்,
Net Working, LAN, WAN, SOHA,
Net 2 Phone, ஆலோசனைகளுக்கு,

## வட கிழக்குத் தொழில் நுட்பம்

NO. 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.
T.P :-021-2223786 & 0777-708498 (Hot line)

(C/35166)(26-24-13)






லண்டனில் வசிக்கும்
திரு. திருமதி ராதாகிருஷ்ணன் – தர்சினி தம்பதிகளின் புதல்வன் **கிருஷான்** இன்று (24. 05. 2004) திங்கட்கிழமை தனது மூன்றாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், அம்மம்மாமார், தாத்தாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்

தகவல்:
த.ராதாகிருஷ்ணன்
(லண்டன்).

(32032) (34-13-16)

# மரண அறிவித்தல்

## மு.சீ.கந்தப்பு

(குருநாகல் முன்னாள் வர்த்தகர்)



வதிரி, சந்திரமகாலைச் சேர்ந்த மு.சீ.கந்தப்பு அவர்கள் நேற்று (2004.05.23) ஞாயிறு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன் (லண்டன் - முன்னாள் பொறியியலாளர், தேசிய கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம், வாழைச்சேனை), காலஞ்சென்ற பிரேமச்சந்திரன், சந்திரமாலா, சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா (லண்டன்), லயன் க.கமலேஸ்வரன் (கணக்காளர் - யாழ்.-கச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்தன், நிரஞ்சன், ராஜீவன், பிறேம்கமல்சந்தர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2004-05-24) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சந்திரமகால்",*
*வதிரி, அல்வாய்,*
*தொலைபேசி இல.021 226 3712.*
(சி-35164)(26-24-13)

தகவல்:
லயன் க.கமலேஸ்வரன் *(மருமகன்),*
கணக்காளர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.


**Direct Start**

**MAY** மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

# COMPUTER TRAINING COURSES

- Diploma in MS Office (DMO)
- Diploma in Computer Studies (DCS)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)
- Diploma in Hardware Engineering (DHE)




மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்

# ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677 | பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் 108, K.K.S. யாழ்ப்பாணம். ✆071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |







**Mercury** @ MICRO PC SYSTEMS

அதிநவீன புத்தம் புதிய கணினிகள்
சிறந்த விலைகளுக்கு காட்சியறைக்கு வாருங்கள்
ரூ 38,000 /= தொடக்கம் | AMD/Intel P4 Computers | மற்றும் அனைத்து கணனி உதிரிப்பாகங்களும்

# மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

| யாழ்ப்பாணம் | வெள்ளவத்தை | கொட்டாஞ்சேனை |
|---|---|---|
| 175/3 கஸ்தூரியார் வீதி<br>021 2225893<br>071 2374181 | 15. 36வது ஒழுங்கை<br>011-4513235<br>011-4516764 | 82 புதுச் செட்டித் தெரு<br>011-4613617<br>011-4619673 |

# வகுப்பறைக் கற்றல், கற்பித்தலில் தொடர்பாடல் சாதனங்களின் பயன்

மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குவதற்கும், மாணவர் தம் சிந்தனையை விரிவுபடுத்துவதற்கும், வகுப்பறைச் செயற்பாடுகளில் தொடர்பாடல் சாதனங்களின் பிரயோகம் இணைக்கப்பட வேண்டும். தற்கால நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகம் கொடுக்கக் கூடியதான, அறிவுப்புலத் தேடலில் தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடு உயரிய இடத்தைப் பெறுகின்றது. நாளாந்த வகுப்பறைக் கற்பித்தலின் போது தொடர்பாடல் சாதனங்களின் பிரயோகத்தை ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய வகையில் கல்வியியலாளர்களும் உயர் கல்வி தொழில்நுட்ப ஆய்வு அபிவிருத்தி நிறுவனங்களும் பங்களிப்புச் செய்யவேண்டும்.

பிரதேச கல்வி விருத்தியில் கல்வியியலாளர்களின் தன்னலமற்ற சேவை முன்னிடத்தைப் பெறுகின்றது. கல்வியியலாளர்களுக்கிடையே கருத்து மோதல எழுவது வழக்கம். எனினும், சமூக மனித விருத்தியில்/ இயைபு வாழ்வில் எதிர்மறையான சிந்தனைகளை தவிர்த்து ஆக்கபூர்வமான அணுகுமுறைகளுக்கு சார்பான சிந்தனைகளே வேண்டப்படுகின்றன.

காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமுறும் கல்வி சீர்திருத்தங்களுக்கு சார்பாக இவர்களின் தன்னலமற்ற பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

## இயற்கை நிலை

கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் சுற்றாடல்சார் செயற்பாடுகளுடனேயே ஒன்றித்துள்ளன. மாணவர்கள் கற்றலில் வீடு, பாடசாலை, பிரதேசம், தேசம், சர்வதேசம் என்ற படி ஒழுங்கில் அடிப்படைத் தேர்ச்சிகளை விருத்திசெய்து கொள்கின்றனர். கற்றல் சுற்றாடல் சார் தேர்ச்சிகளை மையமாகவும், கற்பித்தல் மாணவரை மையமாகவும் கொண்டு இணைக்கப்படுகின்றன. இங்கு இயல்பான இயற்கைநிலை கற்றல் கற்பித்தல் விரும்பப்படுகின்றது.

வகுப்பறைக் கற்பித்தலின் போது சுற்றாடல்சார் இயற்கைச் சூழலை தொடர்பாடல் சாதனங்களின் பிரயோகத்திற்கூடாக மாணவரிற்கு காட்சிக்குட்படுத்தல் வேண்டும். இது மாணவரின் கல்வி மீதான விருப்பையும், ஆர்வத்தையும் தூண்டுவதோடு, மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் வகைசெய்கின்றது. பௌதிகசூழல், உயிரியற்சூழல், சமூகச் சூழல் என்பன எமது கற்பித்தலை முழுமையாக உள்ளடக்கியுள்ள பகுதிகளாகும். உயிரியற்சூழலை கற்பிக்கும்போது தாவரங்கள், நிலவளம், நீர்வளம், உயிரினவளம் போன்றவற்றைக் கற்பிக்கும் பாட உப அலகுகளுக்கேற்ப வகுப்பறையில் காட்சிப்படுத்தவேண்டும்.

எமது பிரதேச மாணவர்களுக்கு எமது பிரதேசத்தின் சூழல் முழுமையாகத் தெரியாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், எமது கலைத்திட்டத்தில் கடல்வளம், கைத்தொழில், சிறுகைத்தொழில், தென்னைப் பயிர்ச்செய்கை, நெல் விவசாயம்/தோட்டப் பயிர்ச்செய்கை, தாவரங்கள், உயிரினங்கள் அவற்றின் செயற்பாடுகள் பற்றி கற்பிக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் கருத்தியல் ரீதியான கற்பித்தலாகும் அல்லது சில சித்திரங்களாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

தற்கால மாணவர்களின் சிந்தனை வித்தியாசமானது; முற்போக்கானது; எதிர்பார்ப்புக்களைக் கொண்டது. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்கும் குறுகிய கால இடைவெளி காணப்பட்டபோதும் கூட இந்த வேறுபாட்டை உணரமுடியும். அதற்கேற்ப கற்பித்தலிலும் மாற்றம் தேவை.

## காட்சிப்படுத்தல்

யாழ் மாவட்டத்திலுள்ள தென்னை, பனைவளம் அதுசார்பான உற்பத்தி முறைமை, கடல்வளம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, தாவர வகைகள், விவசாயம் தோட்டப் பயிர்ச்செய்கை, வர்த்தகம், வீதி அபிவிருத்தி போன்ற பல விடயங்கள 'வீடியோ' மூலம் படமாக்கப்பட்டு அதன் பிரதிகள் 'வீடியோ' நாடா, சீ.டி. போன்றவை மூலம் எல்லா பாடசாலைகளுக்கும் வழங்கப்படவேண்டும். பாடசாலைகளில் கற்றல் உபகரணக் கொள்வனவுக்காக தர உள்ளீட்டுப்பணம் வழங்கப்பட்டுள்ளது. பல பாடசாலைகளில் தொலைக்காட்சி, கணனி வசதிகள் உள்ளன. வகுப்பறைக் கற்பித்தலின் போது - குறிப்பிட்ட பாட அலகினை கற்பிக்கும்போது - குறித்த படக் காட்சியினை காட்சிப்படுத்தி கலந்துரையாடி அவர்களின் சிந்தனையைக் கிளறி கற்றலுக்கு ஊக்குவிக்கலாம். பிரதேச வளம், மக்கள் வாழ்க்கை முறைமை, பொருளாதார கட்டமைப்பு போன்ற பல விடயங்களை இதன் மூலம் நிதர்சனமாகக் கற்பிக்கலாம். ஆசிரியரின் விரிவுரை முறை குறைக்கப்பட சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சிந்தனையைக் கிளறி மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் உருவாக்கப்படுகின்றது.

இன்றைய நாளில் திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர்களை கவருகின்ற பெரும் சக்திகளாக திகழ்கின்றன. அவர்களின் ஆர்வம் பாடசாலையின் கற்றலுக்கு திசைதிருப்ப வகுப்பறையில் தொடர்பாடல் பிரயோக இணைப்பு அவசியமாகின்றது.




ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு மிருகங்கள், பறவைகள், பூங்கா, தாவரங்கள் போன்ற இயற்கைச் சூழல் உள்ளிட்ட கற்றல் செயற்பாடுகள் கொண்ட 'வீடியோ' காட்சிகள் உருவாக்கப்படவேண்டும். கணிதச் செயற்பாடு, மொழிச் செயற்பாடு, அழகியல் செயற்பாடுகளை இயற்கையோடு இணைந்த விதத்தில் படமாக்கப்பட்டு வழங்கப்படவேண்டும். கணித, மொழி எண்ணக்கருக்களை கற்பிக்கும்போது வகுப்பறையில் இவற்றைக் காட்சிப்படுத்திக் கற்பிக்கமுடியும்.

இவ்வாறான கற்பித்தல் முறைமை மாணவரின் மனப்பாங்கு மாற்றத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆசிரியரின் சுமை குறைக்கப்படுகின்றது. மாணவர் வரவும் அதிகரிக்கும். வகுப்பறை மகிழ்ச்சியான கூடமாக அமையும்.

## எதிரான கருத்துகள்

- இவ்வாறு ஒரு திட்டத்தை முன்மொழியும் போது எதிரான கருத்துக்கள் தோற்றம் பெறும். எல்லாப் பாடசாலைகளிலும் தொலைக்காட்சி, கணனி வசதி இல்லை. மின்சார வசதி இல்லை எனச் சிலர் வாதிடலாம். எந்த ஒரு நாட்டிலும் ஒரே நேரத்தில் சகல பாகங்களிலும் அபிவிருத்தி நடைபெற்றதாக வரலாறு இல்லை. தற்போது பாடசாலைகளில் இருக்கும் வளங்களை உச்சபயன்பாட்டிற்கு உட்படுத்தி படிப்படியாக நாம் ஆரம்பித்துச் செல்லமுடியும். முதற்கட்டமாக தொலைக்காட்சி, கணனி, வானொலி உள்ள பாடசாலைகளில் இத்திட்டத்தை அமுல்படுத்த முடியும். தொடர்ந்து குடும்பப் பாடசாலை அமைப்பில் ஒருங்கிணையும் போது ஏனைய பாடசாலைகளும் ஏதோ ஒரு வகையில் நன்மைபெறும். பெரும்பாலான பாடசாலைகளில் மின்சார வசதி இல்லை. ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும்போது அதன் பலாபலன் தொடர்ந்து ஏற்பட வாய்ப்புண்டு. பாடசாலை சமூகத்தினர் இதனை விருத்திசெய்ய வாய்ப்புண்டு.

இவற்றுக்கும் மேலாக ஒவ்வொரு வலயத்திலும் ஒரு முழுமையான வள நிலையம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும். அந்த வள நிலையம் சகல பாடங்களுக்குமான தொடர்பாடல் தொகுதியை முழுமையாகக் கொண்டிருப்பதோடு ஒரு தொகுதி தொடர்பாடல் சாதனங்களையும் கொண்டு இருக்கவேண்டும். இவற்றைத் தேவையான பாடசாலைகள் எடுத்துச்சென்று பயன்படுத்தக்கூடியதான இரவல் வழங்கும் முறையும் இருக்கவேண்டும். வலயத்திலுள்ள கல்வி அபிவிருத்திக்கான வாகனம் இந்தத் தேவைக்காகப் பயன்படுத்தப்படலாம். இந்த வள நிலையச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக விருத்திசெய்யும் போது சகல பாடசாலைகளும் சமசந்தர்ப்பம் பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

## ஆசிரிய வளவிருத்தி

வருடாந்தம் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி, அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர்களால் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி என்பன ஒருமுகப்படுத்தப்பட்டு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும் போது கல்வி மீதான விருத்தி புதிய தொழில்நுட்பம் நோக்கித் திசை திருப்பப்படும். மேற்குறிப்பிட்ட செயற்பாட்டிற்கான ஒழுங்கில் ஆசிரிய வளம் விருத்திசெய்வதோடு, ஆசிரியப் பயிற்சிப் பட்டறையில் கற்பித்தல் கலைத்திட்டம் தொடர்பாடல் சாதனங்களில் பதிவுசெய்யப்பட வேண்டும். இதனால், ஆசிரியர்களும் சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவர். ஆசிரியர்களுக்கு விரிவுரைசார் கருத்தரங்குகளை முற்றாக நீக்கி செயற்றிறன்மிக்க பயிற்சிகளே வழங்கப்படவேண்டும். உதாரணமாக சாதாரண ஒரு கடதாசியை பல மடிப்புகளாக மடித்து வெட்டப்படும்போது பல உருவங்களை வெட்டி எடுக்கமுடியும். இதனை செயல்ரீதியாக செய்து காட்டல், செய்து கற்றல்முறையில் பயிற்சி வழங்கவேண்டும். இதுவே வினைத்திறன் மிக்க பயிற்சியாகும். இதுபோல, காட்சிகளைப் படமாக்கி 'வீடியோ'வில் பதிவுசெய்யும் பயிற்சியினையும் வழங்கும்போது மிக வேகமாக தொடர்பாடல் சாதனங்கள் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இணைய வாய்ப்பாகிறது. இங்கு தொடர்பாடல் சாதனங்களை கையாளும் பயிற்சியும், தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்தும் செயற்பாடும் இணைக்கப்படுகின்றன. ஒரு கற்றல் சாதனத்தை உருவாகப் பாடசாலைத் தர உள்ளீட்டு நிதி உதவியளிக்கின்றது. இம்மூன்றும் இணையும்போது வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாற்றம் தோற்றுவிக்கப்படும்.

ஆரம்பத்தில், எமது சுற்றாடலை காட்சிப்படுத்தி தொடக்கப்படும் கற்பித்தல் வகுப்பு படிநிலை உயரும் போது தேசம், சர்வதேசம் என்ற அளவில் விரிவடையும். அவ்வாறு விரிவடையும்போது நாட்டிலுள்ள நீர் மின் உற்பத்தி முறைமை, நீர்பாசன அபிவிருத்தித் திட்டங்கள், காடுகள், தாவரவியல் பூங்கா, விலங்கு பறவைகள் சரணாலயங்கள், வைத்திய சேவை, கூட்டுறவு, காப்புறுதி, வங்கிச் செயற்பாடுகள், உலக கைத்தொழில் மையங்கள், போக்குவரத்து, வலைப்பின்னல் போன்ற காட்சிகள் படமாக்கப்பட்ட 'வீடியோ' பிரதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக உள்ளூரிலும் அவர்களுக்கூடாக உலகநாட்டு தூதரகங்கள் மூலமாகவும் சர்வதேச விடயங்களைப் பெறமுடியும். இதன் தொடர்பில் சர்வதேச வலைப்பின்னலையும் பயன்படுத்த முடியும். எமது பிரதேசக் கல்விச் செயற்பாட்டில் சகலரையும் இணைக்கும் ஒரு முயற்சியும் அவர்களின் முழுமையான பங்களிப்பு கிடைக்கத்தக்கதான ஒரு சூழல் தோற்றுவிக்கப்படுகின்றது. இது கல்வி விருத்திக்கு ஆரோக்கியமான நிலையை தோற்றுவிக்கும்.

## அமைப்பு ரீதியான நடவடிக்கை

பிரதேசத்திலுள்ள சுற்றாடல்சார் தொகுதிகளை பாட அலகுக்கு பொருத்தமான 'வீடியோ' படமாக்கல் விடயத்தினை தனியார் ஒருவரினால் செயற்படுத்த முடியுமாயினும் அதனைப் பாடசாலைக்கு வழங்கும் போது எழும் எதிர்மறையான கருத்துக்கள் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். ஆரம்பத்தில் நிறுவன அமைப்பு ரீதியாக அதனை மேற்கொள்ள வேண்டும். யாழ். மாவட்டத்தில் துறைசார் கல்வியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், அனைத்துத் துறைசார் அமைப்பினரும் கொண்ட ஓர் அமைப்பு ரீதியாக

ஐ.புவனேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி முகாமைத்துவம்)
தீவகக் கல்வி வலயம்

இதனைத் தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட 'வீடியோ' படங்களைப் பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும். இதனைக் கொள்முதல் செய்ய பாடசாலைகளில் நிதி உண்டு. அத்துடன் அதிபர்களும். ஆசிரியர்களும் ஆர்வமாக உள்ளனர். இதனைச் செயல்வடிவப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து ஆரோக்கியமான முடிவினை மேற்கொள்ள வேண்டும். படிப்படியாக தனியார்த் துறையினரும் பல அறிவியற் காட்சிகளைப் படமாக்கி சந்தைப் படுத்தும் சந்தர்ப்பமும் தொடர்ந்து ஏற்படும். இவை கல்வி வளர்ச்சிக்கு மிகவும் உந்துசக்தியாக அமையும்.

*(வளரும்)*

## கல்விச்சாலைக் காட்சிகள்



எஸ்.ரி.பி.கணனி நிறுவனத்தினரால் 'யூனிசெப்' நிறுவன ஆதரவுடன் நடத்தப்பட்ட வலயக் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின்போது யூனிசெவ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி யூடிற் புறானோ பயிற்சி உத்தியோகத்தர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், எஸ்.ரி.பி.நிறுவன இயக்குநர் எஸ்.சிவலிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)*




ஜி.ரி.சற். நிறுவனத்தின் உதவியுடன் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நிறுவப்பட்ட கட்டடத்தை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன், பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமார், ஜி.ரி.சற் நிறுவன அதிகாரிகளான எஸ்.புஸ்பநாதன், எஸ்.யோகேந்திரா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10-49)



ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.குபேரநாதனும், சிறப்பு விருந்தினர் ஜெ.சூசைதாசும், பாடசாலை அதிபர் க.ஜெயராசாவாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கு.தர்மகுலசிங்கத்தாலும் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*



வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய ஸ்தாபகர் தினவிழா அண்மையில் நடைபெற்றபோது அதிபர் சு.தர்மலிங்கம் உரையாற்றுவதையும் ஸ்தாபகர் நினைவுரையை நிகழ்த்திய வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் சி.துரைராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்:தென்மராட்சிச் செய்தியாளர்)*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# 'ஜொலிஸ்ரார்' கிண்ணம் கே.ஸி.ஸி.ஸி. அணிக்கு

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய 'ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் 3 விக் கெட்டுக்களால் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகமும் , யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணித் தலைவர் யங்ஸ்ரார் அணியினரை முதலில் துடுபபெடுத்தாடுமாறு அழைத்தார்.

இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய 'யங்ஸ்ரார்' அணியினர் 36.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அந்த அணி சார்பாக ஏ.துஷ்யந்தன் 45 ஓடடங்களையும் அணித் தலைவர் ஞா.சசிவர்ணன் 36 ஓட்டங்களையும் , எஸ். சுதாகரன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் என்.நந்தீஸ்வரன், எஸ்.சிற்சபேசன் மற்றும் கெ.துஷ்யந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


வெற்றிக்கு 191 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கே.ஸி.ஸி.ஸி. அணி 29.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதன்மூலம் மூன்று விக்

## விளையாட்டு

கெட்டுக் களால் வெற்றியீட்டி 'ஜொலிஸ்ரார்' கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. அந்த அணி சார்பாக இ.ஐங்கரன், எஸ்.சிற்சபேசன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 53, 10 ஓட்டங்களையும், ரீபிரகாஸ் 44 ஓட்டங்களையும், சி.மதுஷன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

யங்ஸ்ரார் அணி சார்பாகப் பந்து வீசிய ஞா. சசிவர்ணன், கே.கிருஷ்ணச்சந்திரா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சே.சுதாகர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாடடக்காரராக யங்ஸ்ரார் அணியைச் சேர்ந்த ஏ.துஷ்யந்தனும் , சிறந்த பந்து வீச்சாளராக கே.ஸி.ஸி.ஸி. அணியைச் சேர்ந்த எஸ். சிற்சபேசனும், சிறந்தகளத் தடுப்பாளராக எஸ். சபாநாத்தும், ஆட்ட நாயகனாக கே.சி.சி.சியைச் சேர்ந்த இ.ஐங்கரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-5-86)



ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலீஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மட்டுப்படுத்திய ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியும், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் மோதுவதைப் படத்தில் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)
DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3521920 இலிருந்து
3536091 வரை
சீட்டிழுப்பு இல. 1506
திகதி 22.05.2004
வெற்றி எண்கள்
17 22 31 32 33
போனஸ் எண் 43
ஜக்பொட் பரிசு ரூபா. 59,61,350/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 59,61,350/- | 59,61,350/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 96 | 10,000/- | 9,60,000/- |
| 3 | 4,467 | 500/- | 22,33,500/- |
| 2 | 74,391 | 20/- | 14,87,820/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 17ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 91,329 | 10/- | 9,13,290/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 1,16,55,960/-
இந்த புதன்கிழமை ஜக்பொட்
Rs. 15,00,000/-
தொடர் இல. 2575985 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 மே 26ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.
சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் தங்க நகை பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
3529377-8-38
3523331-7-06
3523284-5-14
3535595-9-39
3528305-5-01

### மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் ஜுன் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (ஐ-7-5)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள அடுத்தமாதம் 10ஆம், 11ஆம், 12ஆம ஆகிய திகதிகளில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

(ஐ-7-5)

### பெக்கம் தொடர்ந்தும் ரியல் மார்ரீட்டில்

இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்கம் இங்கிலாந்தில் உள்ள மென்செஸ்டர் விளையாட்டுக்கழகத்தில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு விலகி ஸ்பெயின் நாட்டில் உள்ள ரியல் மாட்ரீட் கழகத்தில் ஆடிவருகிறார். இதற்காக இவர் கோடிக்கணக்கில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

குடும்ப சூழ்நிலை காரணமாக பெக்கம், ரியல் மாட்ரீட் கழகத்தில் இருந்து விலகித் தனது சொந்த நாட்டில் உள்ள செல்சியா கழகத்துக்காக ஆடப்போவதாக செய்திகள் வெளியாகின. இதைப் பெக்கம் முற்றாக மறுத்துள்ளார். மேலும் ரியல் மாட்ரீட் கழகத்திலேயே தான் தொடர்ந்து ஆடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

### மாகாண பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே24

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நான்கு கட்டமாக நடைபெறவுள்ளன. ஜுலை 3ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டிகள் வவுனியாவிலும் -

இரண்டாம் கட்டப்போட்டிகளாக பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 6ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை வவுனியாவிலும்-

மூன்றாம் கட்டப்போட்டிகளாக ஆண்களுக்கான போட்டிகள் 16ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை திருகோணமலையிலும் -

நான்காம் கட்டப்போட்டிகள் 24ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை திருகோணமலையிலும் நடைபெறவுள்ளன.

(ஐ-7-5)



பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் பெற்ற வெற்றிக்கேடயங்கள், வெள்ளிக்கிண்ணங்களுடன் காணப்படுகின்றனர். (படம்:வடமராட்சிச்செய்தியாளர்)

## கரும்புலி மில்லர் ஞாபகார்த்தமாக மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மே24

கரும்புலி கப்டன் மில்லர் ஞாபகார்த்தமாக வல்வை விளையாட்டுக் கழகம் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுளளது.

தமிழீழ விளையாட்டுத் துறை மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டி யில் யாழ். மாவட்டத்திலுள்ள 18 (முன்னணிக் கழகங்கள் மோதவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி முதல 20 ஆம் திகதிவரை வல்வை விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறும் இப்போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்படும் கழகங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கரும்புலி மில்லரின் நினைவு தினம் ஜுலை 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ளது. (ஐ-5-173)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 579 |
| திகதி | 21-05-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5670192- 5682794
லக்கினம் மகரம் .
வெற்றி இலக்கங்கள்
03 04 18 52
ஜக்பொட் பரிசு
ரூபா.29,16,800/-
வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமைக்கான
ஜக்பொட் ரூபா. 35,41,150/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,79,535 | 10/- | 27,95,350/- |
| 2.இலக்கங்கள் | 25,685 | 20/- | 5,13,700/- |
| 1.இல + லக்கினம் | 25,513 | 30/- | 7,65,390/- |
| 2.இல + லக்கினம் | 2,328 | 100/- | 2,32,800/- |
| 3.இலக்கங்கள் | 685 | 500/- | 3,42,500/- |
| 3.இல + லக்கினம் | 68 | 5,000/- | 3,40,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 29,16,800/- | - |
| மொத்தம் | 3,33,818 | - | 53,89,740/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,89,740
தொடர் இல. 4699349 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 மே 25ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.
அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்
5674751-4-20
5681718-4-83
5672447-4-07
5682188-9-80
5671887-7-12

## மரண அறிவித்தல்

### முருகேசு வினாசித்தம்பி
### (கிளாலி தம்பு)

கெற்பேலியைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வினாசித்தம்பி நேற்று (23.05.2004) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அனபுக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, அருளானந்தம் மற்றும் சிவானந்தம் (முன்னாள் முகாமையாளர், கொடிகாமம் ப.நோ.கூ.சங்கக் கிளை), மனோரஞ்சிதம் (லண்டன்), யோகேஸ்வரி (துணுக்காய்), விவேகானந்தம் (ராசா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற செல்வரட்ணம், தம்பாபிள்ளை, ஆனந்தஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியான் ஓடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*
*(32258)(37-14-18)*

தகவல்:
வி.சிவானந்தம் (இரத்தினம்)
வி.விவேகானந்தம் (ராசா).

# இறை அடியவர்கள் பெருமையை உலகறியச் செய்தவர் சேக்கிழார்

**பெரியபுராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்று. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

குரு, லிங்கம், சங்கமம் என மூன்று வகையான வழிபாடுகள் சைவ சமயத்தில் பேசப்படுகிறது. சங்கமம் என்பது அடியார் கூட்டம். சைவத்தில் அடியார் வழிபாட்டுக்கு முதலில் வழிசெய்தவர் சேக்கிழார் பெருமான். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகை என்னும் பதிகத்தில் 63 தனி அடியார்களையும், ஒன்பது தொகையடியார்களையும் குறிப்பிட்டார். அதன் வழியே திருத்தொண்டர் திருவந்தாதி நம்பியாண்டார் நம்பிகளால் அருளப்பட்டது. பதினொராம திருமுறையில் உள்ளது. திருத்தொண்டா திருநாமக் கோவை என்னும் நூலும் உண்டு. இந்த மரபு வழியைப் பின்பற்றினார் சேக்கிழார். சோழ அரசனுக்கு மந்திரியாய் இருந்த போது, அவன் 'சீவகசிந்தாமணி' என்னும் சமணகாப்பியத்தைப் படித்து, கேட்டு, வீணே காலம் போக்கினான். மந்திரியின் கடமை அரசனுக்கு சுடும் என்றாலும் நல்ல புத்தி கூறுவது அரசன் 'நல்ல கதை' ஆக்கித்தந்தால் படிப்பேன என்றான். மந்திரியார் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை வணங்கி, திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார். அரசன் நூல் அரங்கேற்றத்தின் பின், புலவரையும், நூலையும் யானை மேல ஏற்றி ஊர்வலம் செய்வித்து தானே கவரி வீசினார். இந்தப் பெரியபுராணத்துக்கு அடி எடுத்துக் கொடுத்தவர் நடராசப் பெருமானே என்பர்.

உள்ளொளி பெற்ற சான்றோர் மனுநீதி கண்ட புராணத்தையும், கணணப்பநாயனார் புராணத்தையும் அதி விசேடமாகப் பாராட்டுவர். அரசன் குடிகளைத் தன் பிள்ளைகளாகப் போற்ற வேண்டும் என்கிறது வேதம். குடிகள என்றால் மனிதர்கள் மட்டுமல்ல; உயிரினங்கள் அனைத்துமே. பசுவும் கன்றும கூட அரசனின் வாய்பேசாத குடி மக்களே. தன் ஒரு குலத்திற்கு ஒருமைந்தன் தவறு செய்தான். தற்செயலாகத் தேர்ச்சில்லின் கீழ் கன்று நசியுண் ணக் காரணமானான் மந்திரிமாா சாத்திரங் காட்டி பிராயச்சித்தம் செய்யும் வழிகளைக் கூறினர். ஆனால், மன்னனோ எந்தப் பிராயசசித்தமும் தாய்ப பசுவின் துயரத்தை நீக்குமோ? ஆகவே, அதன் கன்றை எழுப்பிக் கொடுக்க முடியாத நான், அதுபோல பிள்ளையை இழந்து வருந்து வேன் என்றான். மகனைத் தேர்க்காலில் நசுக்கச் சொல்கிறான். அரச கட்டளையை மீறி மந்திரி உயிர்வாழ மாட்டான் எனவே, மந்திரிமார் தம் உயிரை மாய்த்தனர் அரசன் தன் மகன் மீது தேரைச செலுத்தினான். நினைக்க முடி யாத இச்செயலைக் குறித்து 'வேதம் தமிழ் செய்த நாடு இந்தத் தமிழ் நாடு' என்பர் பெரியோர். கொடுங்கோல அரசு களையே கண்ட இக்காலத்தவா இது வெறும் கற்பனைக் கதை என்பர். மக்களாட்சி என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிச் சம்மதம் பெற்று, ஆட்சி பீடத்தில் ஏறுவோர் மக்களை மாக்களாக நடத்துவதை மட்டுமே அறிந்த நாம் ஓர் அரசாட்சியைக் கண்டிராத நாம இதனை வெறும் இலட்சியக் கதை என்று இன்று கருதலாம். தம் ஜனநாயக ஆட்சி ஆயிரம் வருடம் பழமை வாய்ந்தது. அதுவே, உலகின் தலைசிறந்த ஆட்சி என்று தற்புகழ்பாடும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் பயின்று, அதற்கு மேல் சிந்திக்கத் தெரியாத குருடர்களாகி விட்டோம். நம்மை மாடுமேய்கின்றவர்களுக்கு நாமே கயிறும கோலும் எடுத்துக் கொடுக்கின்றோம்.

நீதி என்ற எண்ணக்கரு ஒவ்வொரு மனிதனின் நெஞ்சிலும் குடி கொண்டிருக்கிறது. என்றாலும் அதை கோபம், பொறாமை, ஆத்திரம், சுயநலம முதலிய கெட்ட எண்ணங்கள் மூடி விடுகின்றன.

**வி.சுகிர்தினி**

பெரிய புராணத்தில் வரும் பாத்திரங்கள் சமூகத்தில் நிலவும் சமூக விரோத எண்ணங்களின் தாக்கத்தை எப்படிச் சமாளிப்பது என்பதைச் சுட்டிக காட்டுகின்றன. மெய்ப்பொருள் நாயனார் மீது பொறாமை கொண்ட மூத்த நாதன் அவரை நேர்மையான - நீதியான போரில் வெல்ல முடியாமல் வஞ்சனையால் வெல்ல வருகின்றான். சிவனடியார் வேடத்தில் புத்தகத்தினுள குத்துவாளை மறைத்து வருகின்றான். போதனை செய்யப் புத்தகத்தை விரிப்பது போலப் பாசாங்கு செய்து வாளை எடுத்துக் குத்துகிறான். அதைத் தடுக்க வந்த காவலாளியை அரசன் கையமர்த்தி தத்தா நமர் என்கிறான்.

இறைபணி நிற்பவர் நாயன்மார். இறைவன் இப்பொறாமைக்காரன் மூலம தொழிற்பட்டு தன்னைத் தண்டிக்கிறான். இச்செயலில் இறைவன் கருத்து என்ன என்று விளங்கியபடியால் பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே என்று அன்று அமைந்து அடங்கிய சான்றோர் ஆயினார் மெய்ப்பொருள் நாயனார்.



யாழ்.சைவ பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்த திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை தின நிகழ்வுகள் அண்மையில் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# தேசிய முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் மீது தாக்குதல்

அட்டாளைச்சேனை, மே24

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் மாற்றுக் குழு ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் கல்முனை அஷ்ரப் வைததியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை அல்முனீரா வீதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

எம்.எஸ்.உதுமா லெவ்வையின் மாமனாரும் தேசிய முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரும் அமைச்சர் அதாவுல்லாவின் இணைப்பாளருமான அப்துல் மஜீத் (வயது 60) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக முனாஸ் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபர் அக்கரைப்பற்று மஜிஸ்ரேட் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட இருந்தார்.(எ-க)

# திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்தார்

கொழும்பு,மே24

திறைசேரியின் உயர் அதிகாரி ஒருவர் பதவியிலிருந்து விலகியிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. மேலும் பல அதிகாரிகள் புதிய அரசு பதவிக்கு வந்த பிறகு பணி ஏதும் வழங்கப்படாமல் 5 வாரங்களுக்கும் மேலாக வேலை ஏதுமின்றி இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

1994ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியில். பணிபுரிந்து வந்த வரான திறைசேரியின் பிரதிச்செயலாளா பையிஸ் மொகிதீன் பதவியைவிட்டு விலகியுள்ளார். அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான அமைச்சரவை முடிவொன்றையடுத்தே அவா பதவி விலகியிருப்பதாகக் கூறப் படுகிறது. புதிய திறைசேரி செயலாளர் பி.பி ஜயசுந்தரவுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே அவர் ஓய்வு பெறுவதற்கு இன்னும் காலம் இருக்கும் நிலையில் தமது பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாக கூறப்பட்டாலும் அது பற்றி அவர் எதுவும் கூற மறுத்து விட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது.

இதே சமயம் சுமார் ஆயிரத்து 300 அரச ஊழியர்கள் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாகக கூறப்படுகிறது. முனனாள பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கி வந்த கொள்கை அபிவிருத்தி மற்றும். அமுலாக்கல் அமைச்சு இரத்துச் செய்வதற்கு புதிய அரசு முடிவு செய்ததின் விளைவாகவே இந்த அதிகாரிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (ப)

## யாழ்.பிரதேச ஓய்வூதியர்களுக்கு

யாழ்.பிரதேச செயலகம் ஊடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களை இன்று திங்கட்கிழமை முதல் தமது சுயவிவரங்களை தமது அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலா பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார்.

ஓய்வூதியத் திணைக்களத்தினால வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைய ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்படவிருப்பதாகவும்-

இதனை அடுத்தே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் - பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ-6)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே24

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

# கிராமியக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் புனர்வாழ்வுத் திட்டம்

யாழ்ப்பாணம்,மே24

கிராமிய பொருளாதார கல்வி அபிவிருத்தி நிறுவனம் வடபகுதியில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கும் இளைஞர் யுவதிகளுக்குமான ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 'யுனிசெவ்' ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப் படவுள்ள இத்திட்டம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

நோர்வேயில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் ஒருநாள் செயலமர்வின் மூலம் பெறப்பட்ட நிதியின் மூலம் இந்தத் திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது - என்று வடபகுதி கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கே.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்திட்டத்தின் பிரதான செயற்றிட்டங்களாக ஜி.சீ.ஈ. (சா.த) வகுப்பில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடையாத மாணவர்களுக்கு வளநிலையங்கள் அமைத்து கல்விவழங்குதல் -

இளைஞர், யுவதிகளை தொழில்சார் பயிற்சிக்குத் தயார்படுத்தலையும் வலுவூட்டலையும் மேற்கொள்ளுதல். மாவட்டங்களுக்குகேற்ப விழிப்புணர்வு வாரத்தினை நடைமுறைப் படுத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பகுதியிலும், முல்லைத்தீவில் பாலிநகர் வவுனிக்குளத்திலும், வவுனியாவில் கனகராயன் குளத்திலும், மன்னாரில் மடுஆண்டான் குளத்திலும் வளநிலையங்கள் அமைக்கப்படவுள்ளன - என்று அவர் தெரிவித்தார்.

இதில் இணைந்து கொள்ள விரும்புவோர் தத்தமது கிராம அலுவலர்களுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளுமாறும் இணைப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஜ-5)

## அறிவித்தல்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி **நாகராசா தேவராணி** அவர்கள் 20.05.2004 வியாழக்கிழமை இந்தியாவில் காலமாகி விட்டார் என 21.05.2004 உதயன் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் விளம்பரம் வெளியிட்டு இருந்தோம் இதையிட்டு மிகவும் மனம் வருந்துகிறோம். கோமா நிலையில் இருந்த இவரது நிலை பற்றிய தவறான தகவல எமக்குக் கிடைத்தமையால் இவ்வாறு மரண அறிவித்தல் பிரசுரிக்கவேண்டி ஏற்பட்டு விட்டது.

தற்சமயம் இவர் கோமா நிலையிலிருந்து மீண்டு ஓரளவு குணம் அடைந்துள்ளார் என்பதை சகலருக்கும அறியத் தருகின்றோம். ஏற்பட்ட தவறுக்கு மன்னிப்புக் கோருகின்றோம்

***சிவா வீடியோ லைற்றிங், முடமாவடி.***

தகவல்:
நாகராசா(கணவர்),
(32266)(11-17) சிவகுமார்(மருமகன்).















# மரண அறிவித்தல்

## நாகமுத்து சின்னையா

சண்டிலிப்பாய், ஆலங்குழாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னையா (யாழ்.ஐக்கிய வியாபார சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) 23.05.2004 அன்று காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவராணி, சிவதாசன், ஜெயதாஸன் (ஊழியர் கணேசன் சென்ரர், இணுவில்) ஆகியோரின் தந்தையும் இராமலிங்கம், வசந்தகுமாரி, சுசீலாதேவி, ஆகியோரின் மாமனாரும் சிவஞானம்(நீர்வேலி), புவனமலர் ஆகியோரின் மைத்துனரும், மதன்லால், மீராலினி, நஜன்(IIS,e-Touch), லக்ஷனா, மயூரன், தாட்ஷாயினி, நிரோஜினி, சைலஜன் (CO-OP இன்சூறன்ஸ் , ஸ்கிறிப்நெற்), துளசிகா ஆகியோரின் பேரனும் ரஜீன், அஜய், ரவீனா, சரண்ஜன், ஜனோஜன், ஆரணி ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24.05.2004 திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (32261)(37-11-17)

தகவல்:
சி.ஜெயதாசன் (மகன்).

# நெஞ்சகலா நினைவலைகள்

## 5 ஆம் ஆண்டு

தோற்றம் 28 - 11 - 1917



மறைவு 09 - 04 - 1999

அமரர்
**சாமிநாதன் அந்தோனிப்பிள்ளை**

## 10 ஆம் ஆண்டு

தோற்றம் 09 - 04 - 1915



மறைவு 24 - 05 - 1994

திருமதி
**சிசிலியா அந்தோனிப்பிள்ளை**

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்"
நித்திய இளைப்பாற்றியை ஆண்டவரே இன்றைக்கு
அளித்தருளும் முடிவில்லாத ஒளி ஒளிர்வதாக.

*128, கொழும்புத்துறை வீதி,*
*பாண்டியன் தாழ்வு,*

(32263)(37-17-11-36)

- குடும்பத்தினர்.

## மேஜர் சூரியனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக, மாவீரர் சூரியனின் திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

மேஜர் சூரியனின் பெற்றோர் ஈகச்சுடரை ஏற்றி, திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து ஏனையோர் மலரஞ்சலி செலுத்தினர்.

யாழ் மாவட்ட அரசியல்துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ்மறவன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கடற்புலிகளின் அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் பூரணி அஞ்சலியுரையை நிகழ்த்தினார்.

யாழ். பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் செழியன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

நினைவுக்கல்லை மாவீரர் சூரியனின் சகோதரர்கள் திறந்துவைத்தனர்.

இதேவேளை - இதே நடவடிக்கையில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் அச்சுதனின் நினைவுக்கல் நேற்று ஞாயிற்றுக்கிழமை முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகை செய்யப்பட்டது.

கடற்புலிகளின் நாளாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் இளவழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈகச்சுடரினை மாவீரரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர்; மலர் மாலையினை அணிவித்தனர். பொதுச்சுடர்களை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லக்ஸ்மன் ஏற்றிவைத்தார். கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்ஸன் வணக்கவுரை நிகழ்த்தினார். பிற்பகல் 5.15 மணிக்கு நினைவுத்தூபி மாவீரரின் பெற்றோரால் திரை நீக்கம் செய்யப்பட்டது. (எ-4-9-ரி)

## மீள்குடியமர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகளுடன் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வார்.

மக்கள் மீள்குடியமர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டறிவார் எனவும் - கூறப்பட்டது.

புதிய அரசு பதவி ஏற்றபின் அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் முதல் தடவையாக யாழ். வருகின்றார்.

யாழ். விஜயத்தை முடித்துக்கொண்டு ஏ-9 பாதையூடாக கொழும்பு திரும்பும் அவர், வன்னியில் அரச அதிகாரிகளுடனும் அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு திரும்பியதும் அவர் விசேட அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார் என்றும் கூறப்பட்டது. (எ-3)

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
★ ஜெய்பால் ரெட்டி - தகவல் துறை.
★ தயாநிதி மாறன் - தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு.
★ லல்லு பிரசாத் யாதவ் - ரயில்வே.
★ கபில்சிபல் - சமுத்திர அபிவிருத்தி.
★ ரி.ஆர்.பாலு - தரைவழிப் போக்குவரத்து.
★ சுனில் தத் - விளையாட்டுத் துறை, இளைஞர் விவகாரம்.
★ மணிசங்கர் ஐயர் - பஞ்சாயத்து ராஜ்ஜியம், பெற்றோலியம், இயற்கை வாயு.
★ அ.ராஜா (தி.மு.க) - வனம், சூழலியல், பிரிய ரஞ்சன்தாஸ் முனிஷி - நீர்வளம்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதாகத் தெரியவருகிறது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து முதலில் பேசுவதற்கு ஜனாதிபதி இணங்கிவிட்டுப் பின்பு இந்த விவகாரத்தில் தெளிவற்ற போக்கைக் கடைப்பிடிப்தற்கு இதுவே காரணம் என்று கூறப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களையும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகப் பேச்சுக்களையும் சமகாலத்தில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கே ஆளும் கூட்டமைப்புக்குள் ஆதரவு இருப்பதாக நம்பப்படுகிறது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து முதலில் பேசுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டமைப்புக கட்சிகளுக்குள் ஜே.வி.பியே முன்னணியில் இருந்துவருகின்றது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டகளஸ், மக்கள் ஐக்கிய முன்னணித தலைவர் தினேஸ் குணர்வர்த்தனா ஆகியோருடன் மட்டும் அல்ல பிரதமத் மஹிந்த ராஜபக்ஷவுடனும் ஜே.வி.பி. தலைவர்கள் சந்திக்கவுள்ளனர்.

இதற்கிடையில், தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக ஜனாதிபதி இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்த இருக்கிறார். இந்தச் சந்திப்பு இன்று கண்டியில் இடம்பெறும். (எ-க)

## உறுதிமொழிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடன்பாட்டு அறிக்கையில் இடம்பெறுவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடியோடு விரும்பவில்லை என்று தெரிகின்றது. அந்தநிலையில், பொது உடன்பாடு அறிக்கை வெளியிடுவது தடைப்பட்டுப் போயுள்ளது.

அதற்குப் பின்னர், அமைதி முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என்ற தகவலை எரிக் சொல்ஹெய்ம் தமக்கு நெருக்கமானவர்களோடு பகிர்ந்துகொண்டுள்ளார்.

இன்று கொழும்பு வந்து சேர்ந்த பின்னரே இதற்குமேல் அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தை முன்நகர்த்த எத்தணிக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதற்கிடையில், நேற்று நோர்வேயிலிருந்து இலங்கை புறப்பட முன்னர், நேற்றும் நேற்றுமுன்தினமும் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்துடன் எரிக் சொல்ஹெய்ம் தொலைபேசி மூலம் விரிவாகப் பேச்சுக்களில் ஈடுபட்டார் எனத் தெரிகின்றது.

"பேச்சை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகப் புலிகள் நான்கு விடயங்களைத் தெளிவாக வரையறை செய்து வலியுறுத்தியிருக்கின்றார்கள். அந்த நான்கு விடயங்கள் தொடர்பாகவும் அரசின் நிலைப்பாடு சந்தேகத்திற்கு இடமின்றித் திட்டவட்டமாக வெளிப்படுத்த வேண்டும். இதுவிடயத்தில் அரசின் நிலைப்பாட்டை எழுத்தில் எமது தலைமை எதிர்பார்க்கின்றது. புலிகளுக்கு எழுத்தில் தராவிட்டாலும் அனுசரணையாளர்களுக்கு அது எழுத்தில் வழங்கப்பட்டு, அந்த விடயம் நோர்வே வெளியிடும் பொது இணக்கப்பாட்டு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும் இதுவே புலிகளின் கருத்து - என்று பாலசிங்கம் சொல்ஹெய்முக்கு தொலைபேசி உரையாடலில் தெரியப்படுத்தினார் என்று அறியவந்தது.

புலிகள் வலியுறுத்தியுள்ள 4 அடிப்படை விடயங்கள் தொடர்பாகவும் அரசுத் தரப்புக்குள்ளேயே இப்போதே முரண்பாடான கருத்துக்கள் காரசாரமாக வெளிவரத்தொடங்கிவிட்டன. இவை, புலிகள் இந்த விடயங்கள் தொடர்பாக அரசுத் தரப்பின் நிலைப்பாட்டை எழுத்தில் கோரியதை நியாயப்படுத்துவனவாக உள்ளன என்றும் பாலசிங்கம் சொல்ஹெய்முக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அரசுத் தரப்பின் நிலைப்பாடு - உறுதிமொழி - எழுத்தில் தரப்படாத நிலையில், இம்முறை பேச்சே ஆரம்பிக்கப்பட முடியாது என்றும் -

புலிகள் இம்முறை இது விடயத்தில் ஆக இறுக்கமான - விடாப்பிடியான - பிடிவாதப் போக்கைக் காட்டுவர் என்பதையும் பாலசிங்கம் சொல்ஹெய்முக்கு நேற்றும் வலியுறுத்தினார் எனத்தெரிகின்றது.

எனினும், கொழும்பிலிருந்து ஒஸ்லோவுக்குக் கிடைத்த தகவல்களின் பேச்சுக்கு அடிப்படையாகப் புலிகள் குறிப்பிடும் விடயங்கள் தொடர்பாக எழுத்தில் உறுதியுரை வழங்க அரசு பின்னடிக்கின்றது.

அரசின் தற்போதைய நிலையில் அத்தகைய உறுதியுரையை எழுத்தில் வழங்குவது தெற்கில் அமைதிப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை அடியோடு குழப்பிவிடும் என்றும் -

இந்த யதார்த்தத்தைத் சம்பந்தப்பட்ட தரப்புகள் புரிந்துகொண்டு வாய் மூலமும் இராஜதந்திர வட்டாரங்கள் வாயிலாகவும் - அரசுத்தரப்பு தரும் உறுதிகளை ஏற்று பேச்சுக்கு இணங்க வேண்டும் என்றும் -

அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது. (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையினரைத் தயார் செய்வது குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாகப் பரிசீலிககப்படும் எனவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விமானப் படையின் தேவைக்காக சில எம்.ஐ.17 ரக ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு ஏற்கனவே தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

அதற்கிடையில், புலிகளின் விமானங்களினால் எழக்கூடிய அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கான ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிக்க வேண்டியிருப்பதாக அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (எ-க)


SUBRA (14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
AND
GRAMMAR
BY: BRITTO
ஆரம்பம்: 26.05.2004
புதன் காலை 7.00
★ அனுமதிகளுக்கு முந்துங்கள்.
(C35017(43))

கலையகம்
ஆவரங்கால்
Spoken English
bY: Britto
ஆரம்பம்:-
26-05-2004
புதன் காலை 9.15 மணி
(C32264)

தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★RADIO, T.V, VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ, ரீவி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 10 மாதங்கள்)

★MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இன மோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும்முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு SINGLE PHASE, THREE PHASE இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும்.
(காலம் 7 மாதங்கள்)

★ AIR CONDITIONING and REFRIGERATION சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பித்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 7 மாதங்கள்)

★MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பித்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

DIPLOMA IN ELECTRICAL &ELECTRONIC TECHNOLOGY
(காலம் 12 மாதங்கள்)

புதிய பயிற்சிகள் ஆரம்பம்
02-06-2004 (கிழமை நாள்களில்)
29-05-2004 (சனி, ஞாயிறு நாள்களில்)
தனிப்பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
DIRECTOR

No,367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 222 3335
(32530)(17-11-32)

கிளை
இல.07,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### இராசப்பு மரியதாஸ்

சாரையடி, புலோலி தெற்கைச் சேர்ந்த இராசப்பு - மரியதாஸ் நேற்று 23-5-2004 ஆம் திகதி காலமானார்.

அன்னார் இராசப்பு - ஆரோக்கியம் தம்பதிகளின் அருமை மகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் பாக்கியநாதன், ஞானப்பிரகாசம், அன்பன் தவராசா ஆகியோரின் சகோதரரும் தாவீது ராசா, செல்வராணி (டென்மார்), செல்வி, டெனி, ஜீவன், ரஜீவன், ரஜீவினி ஆகியோரின் அன்பு தந்தையும் மோகன் (டென்மார்க்), உதயகுமார், சுஜி (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றெக்ஸன், ஜெனோ, தனேஷ், கிருஷன் ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-05-2004) திங்கட்கிழமை காலை 10மணிக்கு நெல்லியடி கிரிப்பல்லி சேமக்காலையில் அடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.
(சி-35171)(17-11)

தகவல்:
உதயகுமார்
(மருமகன்).


IMS
Institute of Micro Systems

25% கழிவு

எமது நிறுவனத்தில் ஜுன் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யும் மாணவர்களுக்குக் கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும்.

☞ மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
Institute of Micro Systems
☞Market Lane, Manipay Corss Road, Neervely

SCC விஷேட புலமைப் பரிசில் திட்டம் 2004

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு விஷேட புலமைப்பரிசில் ஒன்றை O/L பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கீழுள்ள விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழுள்ள முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கவுள்ள பயிற்சி நெறிகள் வருமாறு

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP | Duration 6 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | Duration 12 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Duration 4 -5 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | Duration 4 Months |
| DIPLOMA IN VISUAL FOXPRO | Duration 4 Months |
| DIPLOMA IN AUTOCAD | Duration 4 Months |
| DIPLOMA IN C++ | Duration 5 Months |
| DIPLOMA IN VISUAL BASIC | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | Duration 4 Months |
| DIPLOMA IN VIDEO MIXING | Duration 4 Months |

விண்ணப்ப முடிவுத் திகதி 27.05.2004
பயிற்சி நெறி ஆரம்பம் பிரிவு I 07.06.2004
பிரிவு II 12.06.2004

SCC விஷேட புலமைப் பரிசில் திட்டம்
APPLICATION FORM
1. Full name ..............................
2. Address ..............................
3. Course Selected ..............................
4. Date of Birth ..............................
5. N.I.C.No ..............................
6. Sex ..............................
7. Educational Qualification
G.C.E.O/L Year:-........ Index No:-........

| | Subject | Grade | Marks (Office use Only) | |
|---|---|---|---|---|
| 01 | | | | 100% |
| 02 | | | | 75% |
| 03 | | | | 50% |
| 04 | | | | |
| 05 | | | | |
| 06 | | | | |
| 07 | | | | |
| 08 | | | | |
| 09 | | | | |
| 10 | | | | |
| Total | | | | |

Signature of Applicant ...... Date ......

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.